# மரித்தோரின் ஆவிகளினால் மனிதரை அசீர்வதிக்கமுடியுமா?

கிறிஸ்தவர்கள் மத்தியில் நீண்டகாலமாக இருந்து வரும் சர்ச்சைக்குரிய விஷயங்களில் ஒன்று, மரித்த மனிதர்களின் ஆவிகளைப் பற்றியதாகும். அதாவது, “மரித்த உறவினர்கள், மூதாதையர்களின் ஆவிகளினால் உயிரோடிருக்கும் மனிதர்களுக்கு ஆலோசனைகளும், ஆவிக்குரிய வழிநடத்துதல்களும் கொடுத்து அவர்களை ஆசீர்வதிக்கமுடியுமா?” என்பது பொதுவாக கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கும் சர்ச்சைக்குரிய ஒரு கேள்வியாகவே உள்ளது. சில கிறிஸ்தவர்கள், தாங்கள் வாழும் இடங்களிலுள்ள பாரம்பரிய நம்பிக்கைகளினதும் பிறமதச் சிந்தனைகளினதும் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாக, மரித்தோரின் ஆவிகள் தங்களோடு தொடர்புகொள்வதாகவும், தங்களுக்கு மரித்தோரின் ஆவிகளின் மூலம் ஆலோசனைகளும் வழிநடத்துதல்களும் கிடைப்பதாகவும் கூறிவருகின்றனர். மரித்தோரின் ஆவிகள் தங்களுடைய வாழ்வில் அற்புதங்கள் செய்வதாகவும் சிலர் தெரிவித்துள்ளனர். கிறிஸ்தவர்கள் மத்தியில், மரித்த பக்தர்கள் கனவில் வருவது பற்றியும், நேரடியாகக் காட்சியளிப்பதுபற்றியும், அவர்கள் உயிரோடிருப்பவர்களுக்குப் பலதரப்பட்ட ஆசீர்வாதங்களையும் ஆலோசனைகளையும் அருள்வதைப்பற்றியும் பலவிதமான பாரம்பரியக் கதைகளும் உள்ளன. எனவே, மரித்தோரின் ஆவிகளினால் மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வரமுடியுமா? என்பதற்கும், அவைகளினால் உயிரோடிருப்பவர்களுக்கு நன்மையளிக்கமுடியுமா? என்பதற்கும் வேதாகமத்தில் ஏதாவது ஆதாரங்கள் இருக்கின்றதா என்று ஆராய்ந்துபார்க்கவேண்டியது அவசியமாயுள்ளது.

கிறிஸ்தவ உபதேசங்கள், நம்பிக்கைகள், நடத்தைமுறைகள் அனைத்திற்கும் ஆதாரமாக இருப்பது தேவனுடைய வார்த்தையான பரிசுத்த வேதாகமமே.[1] எனவே, வேதாகமத்திற்கு முரணான எந்த ஒரு நம்பிக்கையும் உபதேசமும், நம்பகமானதும் சரியானதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் அல்ல. நாம் சகல உபதேசங்களையும், நமக்கு கொடுக்கப்படுகின்ற ஆலோசனைகளையும் வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இது வேதாகமம் நமக்கு கொடுத்துள்ள ஒரு முக்கியமான கட்டளையாகும். இதனால்தான் “பிரியமானவர்களே, உலகத்திலே அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்” (1யோவா.4:1) என்று அறிவுறுத்தும் வேதாகமம், “சொல்லப்படும் தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிதானிக்கப்படவேண்டும்” என்றும் கூறுகிறது (1கொரி.14:29).[2] எனவே, தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தை அடிப்படையாகக்கொண்டு தீர்க்கதரிசனங்களைச்

---

[1] வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதற்கான ஆதாரங்களை அறிந்துகொள்வதற்கு எனது ***வேதாகமம் தேவனுடைய வார்த்தையா?*** என்னும் நூலைப் பார்க்கவும்.

[2] 1கொரிந்தியர் 14:29ல், நிதானித்தல் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் மூலமொழியில் ஆராய்தல் என்னும் அர்த்தமுடையது. 1கொரிந்தியர் 12:10ல் இச்சொல் “பகுத்தறிதல்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சோதித்துப் பார்த்து நலமானதை ஏற்றுக்கொள்ளவும் பொல்லாங்காய்த் தோன்றுகிறவைகளை நிராகரிக்கவும் நாம் அறிந்திருக்கவேண்டும் (1தெச.5:20-22).[3] இத்தகைய தன்மை ஒருவனுக்கு இல்லாதிருந்தால், அவனுடைய கிறிஸ்தவ விசுவாசம் உண்மையானதாக இராது.[4] ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆவிக்குரிய நிஜத்தையும் போலியையும் வேறுபிரித்து அறியக்கூடிய ஆற்றலுள்ளவனாக இருக்கவேண்டும் என்பதற்காகவே ஆவிகளை சோதித்தறியும்படி வேதாகமம் கட்டளையிட்டுள்ளது.[5] உண்மையில், இத்தகைய மனிதர்களே மெய்யான கிறிஸ்தவர்களாக இருப்பார்கள். இதனால்தான், பிரசங்கிக்கப்பட்ட தேவவசனத்தை மனோவாஞ்சையாய் ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தவர்கள் நற்குணசாலிகளாக இருந்தார்கள் என்பதை அப்போஸ்தலர் 17:11 அறியத்தருகின்றது. இவ்வசனத்தில் “ஆராய்ந்து பார்த்தல்” என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல்,[6] நீதிபதி வழக்கை விசாரித்து உண்மையைக் கண்டறிவதைக் குறிப்பிடும் சொல்லாக உள்ளது.[7] எனவே, ஒரு நீதிபதியைப்போல, தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தின் மூலம், மரித்தோரின் ஆவிகளினால் மனிதரை ஆசீர்வதிக்கவும், அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கவும் முடியுமா? என்று இந்நூலில் ஆராய்ந்து பார்ப்போம்.

## முதலாம் அத்தியாயம்
## 1. மரணத்திற்கு அப்பால் மரித்தோரின் ஆவிகள்

மரித்தோரின் ஆவிகளினால் மனிதரை ஆசீர்வதிக்கமுடியுமா என்பதை அறிந்து கொள்வதற்கு, மரணத்தின் பின்னர் அவைகள் எங்கு செல்கின்றன என்பதை நாம் அறிந்திருக்கவேண்டியது அவசியம். அப்பொழுது அவைகளினால் மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வந்து மனிதரை ஆசீர்வதிக்கமுடியுமா இல்லையா என்பதை நம்மால் அறிந்துகொள்ளமுடியும். மரணத்தின் பின்னர் மனிதருடைய சரீரம் மண்ணில் அடக்கம் பண்ணப்படுகின்றது. அல்லது எரிக்கப்படுகின்றது. வேதாகம காலத்தில் மரித்தோரின் சரீரங்கள் அடக்கம்பண்ணப்பட்டதினால் அவைகள் மண்ணுக்குச் செல்வதாக வேதாகமம் கூறுகின்றது. உலகின் முதல் மனிதனுடைய மரணத்தைப்பற்றி தேவன் கூறும்போது, “நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்” (ஆதி.3:19) என்று குறிப்பிட்டுள்ளார். இதைப்போலவே, பிரசங்கி 3:20ல் “எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது. எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது” என்றும், சங்கீதம் 146:4ல் “அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்” என்றும் நாம் வாசிக்கலாம்.

---

3 1தெசலோனிக்கேயர் 5:20-22ல் “தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றை யும் விட்டு விலகுங்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4 D.Burdick, *Epistles of John: Everyman Bible Commentary*, p. 66.

5 D.L.Akin, *1,2,3 John: The New American Commentary*, p. 170; D.E.hiebert, *The Epistles of John: An Expositional Commentary*, p. 178.

6 “அநாக்ரிநோ” (*anakrino*) என்னும் கிரேக்கச் சொல்.

7 W.J.Larkin, *Acts: The IVP New Testament Commentary*, p. 249.

மரணத்தின் பின்னர் மண்ணுக்குச் செல்லும் சரீரம் அழிந்துபோனாலும் சரீரத்தைவிட்டுப் பிரிவடையும் ஆவி (சங்.146:4, பிர.12:7, யாக்.2:26) அழியாது என்றே வேதாகமம் கூறுகிறது. “ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்” (மத்.10:28, லூக்.12:4-5) என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்றில், “ஆத்துமா” என்னும் சொல் மரணத்தின் பின்பும் உயிரோடிருக்கும் மனிதனுடைய ஆவிக்குரிய பகுதியைக் குறிக்கின்றது.[8] எனவே, மனிதனுடைய ஆவிக்குரிய பகுதி அழியாது என்பதை இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் அறியத்தந்துள்ளார். மனிதனில் “சடப்பொருள் பகுதி” “ஆவிக்குரிய பகுதி” என்னும் இரண்டு பிரதான பகுதிகள் உள்ளன. தேவன் மனிதனை சிருஷ்டித்தபோது, மண்ணினால் அவனுடைய சரீரத்தைச் செய்து, அதற்குத் தம்முடைய ஜீவசுவாசத்தைக் கொடுத்தார் (ஆதி.2:7). இதனால் மனிதன் சடப்பொருள் பகுதியையும், ஆவிக்குரிய பகுதியையும் உடையவனாக இருக்கின்றான். மனிதனின் சடப்பொருள் பகுதியில் மாம்சம், எலும்பு, இரத்தம் போன்றவை உள்ளன. ஆவிக்குரிய பகுதியில் மனிதனின் ஆவியும் ஆத்துமாவும் உள்ளன (1தெச.5:23). மனிதனின் சடப்பொருள் பகுதியான சரீரமும் ஆவிக்குரிய பகுதியும் பிரிவடைவதே மரணமாகும்.[9]

மனிதன் மரிக்கும்போது, அவனுடைய ஆவிக்குரிய பகுதியான ஆவியும் ஆத்துமாவும் சடப்பொருள் பகுதியான சரீரத்தை விட்டுச்செல்கின்றன (2கொரி.5:8, பிலி.1:23). இதனால்தான் வேதாகமத்தின் சில பகுதிகளில் மரணத்தின்போது ஆத்துமா சரீரத்தைவிட்டுச் செல்வதாகவும், ஏனைய பகுதிகளில் ஆவி சரீரத்தைவிட்டுச் செல்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[10] உதாரணத்திற்கு மரணத்தின்போது ஆவி சரீரத்தைவிட்டுப் பிரிந்து செல்வதாகப் பிரசங்கி 12:7, சங்கீதம் 146:4 யாக்கோபு 2:26 என்னும் வசனங்கள் கூறுகையில், ஆதியாகமம் 35:18, லூக்கா 12:20, அப்போஸ்தலர் 7:59 என்னும் வசனங்களில் ஆத்துமா பிரிவடைந்து செல்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்போலவே, மரித்த பிள்ளை உயிர்ப்பிக்கப்பட்டபோது, “பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பிவந்தது. அவன் பிழைத்தான்” என்று 1ராஜாக்கள் 17:22ல் கூறுகிறது.

மனிதனுடைய ஆவிக்குரிய பகுதியில் ஆவியும் ஆத்துமாவும் இருக்கின்றபோதிலும் இவை எப்பொழுதும் ஒன்றாகவே உள்ளன. இதனால்தான், வேதாகமத்தில் மனிதன் “சரீரமும் ஆவியும்” (1கொரி.5:5, 2கொரி.7:1) என்று அல்லது, “சரீரமும் ஆத்துமாவும்” (1கொரி.7:34, மத்.10:28) என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இவ்வசனங்களில் “சரீரமும் ஆவியும்” முழுமனிதனையும் குறிப்பிடுவதுபோலவே, “சரீரமும் ஆத்துமாவும்”

---

[8] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 262.

[9] H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 337; P.Enns, *The Moody Handbook of Theology*, p. 371; L.Berkhof, *Systematic Theology*, p. 668; M.J.Erickson, *Christian Theology*, p. 1169; L.S.Chafer, *Systematic Theology Volume 2*, p. 146.

[10] W.Grudem, *Systematic Theology*, pp. 474-475.

முழுமனிதனையும் குறிக்கின்றது.[11] இதைப்போலவே, மரித்தவர்கள் "ஆத்துமாக்களாக" (வெளி.6:9) அல்லது, "ஆவிகளாக" (1பேது.3:19) இருப்பதாக வேதாகமம் கூறுகிறது. மரணத்தின்பின் உயிருடனிருக்கும் மனிதனுடைய ஆவியையும் ஆத்துமாவையும் உள்ளடக்கிய ஆவிக்குரிய பகுதியைக் குறிப்பிட "மரித்தோரின் ஆவி" என்னும் சொல் இந்நூலில் உபயோகிக்கப்பட்டுள்ளது. சரீர மரணத்தின்பின் இந்த ஆவிக்கு என்ன நடக்கின்றது என்று இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

## 1. மரித்தோரின் ஆவிகள் இவ்வுலகத்தைவிட்டுச் செல்கின்றன

மனிதருடைய மரணத்தின் பின்னர் அவர்களுடைய ஆவி இவ்வுலகத்தைவிட்டுத் தேவனிடம் செல்வதாக வேதாகமம் கூறுகிறது. பழைய ஏற்பாட்டில் பிரசங்கியின் புத்தகத்தில், மரணத்தின்போது மனிதருடைய ஆவி "உயர ஏறுவதாகவும்" (பிர.3:21) "தேவனிடத்திற்குச் செல்வதாகவும்" (பிர.12:7) குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, சரீரத்தைப்போல அவைகள் மண்ணுக்குச் செல்லாமல், மேலே தேவனிடத்திற்குச் செல்கின்றன என்று பிரசங்கி கூறுகிறார்.[12] சகல மனிதருடைய ஆவிகளும் மரணத்தின் பின்னர் தேவனிடம் செல்வதாகப் பிரசங்கி கூறுவது நமக்கு குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஆனால், மரணத்தின் பின்னர் மனிதருக்கு நியாயத்தீர்ப்பு இருப்பதனால் (பிர.12:14, எபி.9:27), சகல மனிதரின் ஆவிகளும் தேவனிடம் செல்வதாகப் பிரசங்கி குறிப்பிட்டுள்ளார்.[13] மேலும், மரணத்தின் பின்பான வாழ்வைப்பற்றி பழைய ஏற்பாட்டில் பொதுவான விஷயங்கள் மட்டுமே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டிலேயே மரணத்தின் பின்னர் தேவனை அறிந்தவர்களுக்கும் அவிசுவாசிகளுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம் தெளிவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

---

[11] மனிதனுடைய ஆவிக்குரிய பகுதியில் ஆவியும் ஆத்துமாவும் உள்ளபோதிலும், வேதாகமத்தின் மூலமொழிகளில் இவற்றைக் குறிப்பிடும் சொற்களுக்குப் பல அர்த்தங்கள் உள்ளன. வேதாகமத்தின் மூலமொழிகளில் ஆவிக்குப் பழைய ஏற்பாட்டில் "ரூஆ.·." (*ruah*) என்னும் எபிரேயச் சொல்லும், புதிய ஏற்பாட்டில் "நியூமா" (*pheuma*) என்னும் கிரேக்கச் சொல்லும், ஆத்துமாவுக்குப் பழைய ஏற்பாட்டில் "நெப்.·.பெ.·.ஷ்" (*nephesh*) என்னும் எபிரேயச் சொல்லும், புதிய ஏற்பாட்டில் "சைக்கி" (*psyche*) என்னும் கிரேக்கச் சொல்லும் உபயோகிக்கப்பட்டுள்ளது. இச்சொற்கள் பொதுவாக மனிதனின் ஆவிக்குரிய பகுதியைக் குறித்தாலும், ஜீவன் (உயிர்) உள்ளான மனிதன், ஆத்துமா, ஆவி, மனம் என்று பல்வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளன. சில இடங்களில் முழு மனிதனையும் குறிக்கும் விதத்திலும் ஆத்துமா என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. தற்காலத்திலும்கூட, "புதிய ஆத்துமாக்கள் சபைக்கு வந்துள்ளன" என்று கூறும்போது, முழு மனிதனையும் குறிப்பிடும் விதத்திலேயே ஆத்துமா என்னும் சொல்லை நாம் உபயோகிக்கின்றோம். பழைய ஏற்பாட்டில், 754 தடவைகள் "நெ.·.பெஷ்" என்னும் சொல் உள்ளபோதிலும், இவற்றில் 110 தடவைகள் மட்டுமே இதை ஆத்துமா என்று மொழிபெயர்க்கலாம். 150 தடவைகள் இச்சொல் உயிர் அல்லது ஜீவன் என்னும் அர்த்தத்தில் உள்ளது. ஆத்துமாவைக் குறிப்பிடும் சொல், ஜேம்ஸ் அரசனுடைய வேதாகமத்தில் 472 தடவைகள் இச்சொல் ஆத்துமா என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் உயிர், (life), சுயம் (self), இதயம் (heart), நபர் (being), என்று 29 வித்தியாசமான வார்த்தைகள் உள்ளன. புதிய ஏற்பாட்டிலும் "சைக்கி" என்னும் கிரேக்கச் சொல் 104 தடவைகள் உள்ளபோதிலும், 19 தடவைகள் மட்டுமே ஆத்துமா என்னும் அர்த்தத்துடன் உள்ளது. இச்சொல் ஜேம்ஸ் அரசனின் மொழிபெயர்ப்பில் 59 தடவைகள் ஆத்துமா என்றும் 39 தடவைகள் உயிர் அல்லது ஜீவன் என்றும், 3 தடவைகள் மனம் என்றும், 2 தடவைகள் இதயம் என்றும், ஓரிடத்தில் நீ என்றும், இன்னுமொரு இடத்தில் நாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், மூலமொழியில் இச்சொல் 11 விதமான அர்த்தங்களுடன் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆவியையும் ஆத்துமாவையும் குறிப்பிடும் சொற்களுக்கு மூலமொழியில் பல்வேறு அர்த்தங்கள் இருப்பதனால், வேதாகமத்தில் இச்சொற்கள் ஒவ்வொரு வசனத்திலும் எத்தகைய அர்த்தத்துடன் உள்ளன என்பதை நாம் ஆராய்ந்துபார்க்கவேண்டும்

[12] I.Provan, *Ecclesiastes/Song of Songs: The NIV Application Commentary*, p. 94.

[13] L.Goldberg, *Ecclesiastes: Bible Study Commentary*, pp. 136-137.

மரணத்தின் பின்னர் தங்களுடைய ஆவி தேவனிடம் செல்லும் என்னும் நம்பிக்கையுடன் பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் இருந்துள்ளதை சங்கீதம் 73:23-25 அறியத்தருகின்றது. "உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" (சங்.73:24) என்னும் சங்கீதக்காரனின் கூற்று, மரணத்தின் பின் அவன் தேவனோடு பரலோகத்தில் இருப்பதைப்பற்றிய அறிவிப்பாகவே உள்ளது. ஏனெனில், "மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" என்னும் சொற்பிரயோகம், "பரலோகத்தில் வரவேற்கப்படுவதையே" குறிக்கின்றது.[14] தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்த ஏனோக்கைத் தேவன் தம்மோடு இருக்கும்படி எடுத்துக் கொண்டதும் (ஆதி.5:24, எபி.11:5), தீர்க்கதரிசியாகிய எலியா பரலோகத்திற்குச் சென்றதும் (2ராஜா.2:11) இதை உறுதிப்படுத்தும் சம்பவங்களாக உள்ளன.[15] "நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" (சங்.23:6) என்று தாவீது கூறும்போது, தான் தேவனுடன் நித்தியகாலமாக இருப்பதைப்பற்றியே அவன் குறிப்பிட்டுள்ளான்.[16] மேலும், "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டி ருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா?" என்று கேட்ட இயேசுகிறிஸ்து, (மத்.22:31) ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்போர் சரீரப்பிரகாரமாக மரித்தாலும், அவர்கள் ஆவிக்குரிய பிரகாரம் உயிரோடு பரலோகத்தில் இருப்பதை அறியத்தரும் விதத்தில், "தேவன் மரித்தோருக்குத் தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார்" என்று அடுத்த வசனத்தில் குறிப்பிட்டுள்ளார் (மத்.22:32).[17] இதிலிருந்து, இவர்களுடைய ஆவிகள் பரலோகத்தில் தேவனுடன் இருக்கின்றன என்பது தெளிவாகின்றது. மேலும், எபிரேயர் 12:1ல், பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் அனைவரும் "மேகம் போன்ற திரளான சாட்சிகளாகப் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளைப் பார்த்துக்கொண்டிருப்பதாகச்" சித்தரிக்கப்பட்டுள்ளதும் அவர்கள் பரலோகத்தில் தேவனுடன் இருப்பதற்கான

---

14 A.Motyer, *After Death: What Happens When You Die?* p. 23.

15 ஏனோக்கும் எலியாவும் மரணமடையாமல் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதினால், இவர்கள் மாம்சசரீரத்துடன் பரலோகத்தில் இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். எனினும், வேதாகமத்தின் ஒரு பகுதியை வியாக்கியானம் செய்யும்போது, முழு வேதாகம உபதேசங்களையும் கருத்திற்கொண்டவர்க ளாகவும், ஏனைய பகுதிகளை முரண்படுத்தாதவிதத்திலுமே வேதப்பகுதிகளை நாம் விளக்கவேண்டும். எனவே, மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று வேதாகமம் கூறுவதனால், ஏனோக்கும் எலியாவும் மாம்ச சரீரத்தில் பரலோகத்தில் இருப்பதாகக் கூறமுடியாது. மேலும், இயேசுகிறிஸ்து மறுபடியும்வரும்போது, உயிரோடிருக்கும் விசுவாசிகள் ஒரு நொடியில் மறுரூபமாக்கப்பட்டு, மகிமையின் சரீரத்துடன் எடுத்துக்கொள்ளப்படுவதாகவும் வேதாகமம் கூறுவதனால், ஏனோக்கும் எலியாவும் இவ்விதமாகவே மறுரூபமாக்கப்பட்டு மகிமையின் சரீரத்துடனேயே தற்பொழுது பரலோகத்தில் இருக்கவேண்டும்.

16 M.Dahood, *Psalms 1-50: Anchor Bible Commentary*, pp. 148-149. சங்கீதம் 23:6ல் ஆலயத்தையே தாவீது கர்த்தருடைய வீடு என்று குறிப்பிட்டுள்ளதாகச் சிலர் கருதுகின்றனர் (F.Delitzsch, *Biblical Commentary on the Psalms Volume 1*, p. 332; A.P.Ross, *Psalms: Bible Knowledge Commentary Old Testament*, p. 812; R.T.Daniel, *How to Study the Psalms*, pp. 93-94; E.A.Leslie, *The psalms: Translated and Interpreted in the Light of Hebrew Life and Worship*, p. 285). இது உண்மை என்றால், எருசலேமில் ஆலயம் கட்டப்பட்ட பின்பே இச்சங்கீதம் எழுதப்பட்டிருக்கவேண்டும். ஆனால், இது ஆலயம் கட்டப்படுவதற்கும் முன்பே தாவீதினால் எழுதப்பட்டுள்ள சங்கீதமாக இருப்பதனால், தாவீது ஆலயத்தில் அல்ல, தேவனுடன் இருப்பதைப் பற்றியே குறிப்பிட்டுள்ளான் (A.Weiser, *The Psalms: The Old Testament Library*, p. 231; H.C.Leupold, *Exposition of Psalms*, p. 214). தாவீதினுடைய மரணத்தின் பின், அவனுடைய மகன் சாலொமோனினாலேயே எருசலேம் தேவாலயம் கட்டப்பட்டது.

17 W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, pp. 821-822.

ஆதாரமாகவே உள்ளது.[18] மறுரூபமலையில் மோசேயும் எலியாவும் காட்சியளித்ததும் (மத்.17:3), இவர்கள் தேவனுடன் இருப்பதை உறுதிப்படுத்துகிறது.[19]

புதிய ஏற்பாட்டில், லாசருவையும் ஐசுவரியவானையும்பற்றிய உவமையில் தேவனை அறிந்தவர்களும், அவரை அறியாதவர்களும் வெவ்வேறு இடங்களுக்குச் செல்வதை இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டியுள்ளார் (லூக்.16:19-31). இவ்வுவமையின்படி மரணத்தின் பின்னர் லாசருவின் ஆவி "ஆபிரகாமின் மடிக்கும்" ஐசுவரியவானின் ஆவி "பாதாளத்திற்கும்" செல்கின்றன (லூக்.16:22-23). யூதர்களுடைய மொழிவழக்கில் "ஒருவருடைய மடியில் இருப்பது" மிகவும் நெருக்கமான உறவைக் குறிப்பிடும் முறையாகும். எனவே, மரணத்தின்பின் லாசரு ஆபிரகாமுடன் மிகவும் நெருக்கமாக இருக்கக்கூடிய இடத்திற்குச் சென்றுள்ளான்.[20] யூதர்களுடைய நூல்களில் ஆபிரகாமின்மடி பரலோகத்தைக் குறிப்பிடும் சொற்பிரயோகமாகவே உள்ளது.[21] ஆபிரகாம் பரலோகத்தில் இருப்பதனால், ஆபிரகாமுடன் மிகவும் நெருக்கமாக இருக்கக்கூடிய இடத்திற்குச் சென்ற லாசரு உண்மையில் தேவனிடத்திற்கே சென்றுள்ளான். இயேசுகிறிஸ்து இவ்வுமையில் சொல்லும் சத்தியத்தை ஆதாரமாகக் கொண்டு "ஆபிரகாமின் மடி" என்பது பிற்காலத்தில் பரலோகத்திற்கான பெயர்களில் ஒன்றாக மாறியது.[22] எனவே, தேவனை அறிந்தவர்கள் மரிக்கும்போது, அவர்களுடைய ஆவி, தேவனிருக்கும் பரலோகத்திற்கே செல்கின்றது என்பது தெளிவாகின்றது.[23]

பழைய ஏற்பாட்டைப்போலவே (பிர.3:21, 12:7) புதிய ஏற்பாடும் மரித்தோரின் ஆவிகள் தேவனிடம் செல்வதாகவே கூறுகின்றது. இதனால்தான் "தேகத்தைவிட்டுப் பிரிந்து இயேசுகிறிஸ்துவுடன் இருக்க ஆசைப்பட்ட" (பிலி.1:23) பவுல், "இந்தத் தேகத்தை

---

[18] W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, p. 820.

[19] P.Enns, *The Moody Handbook of Theology*, p. 374.

[20] R.F.Hock, "Lazarus and Micyllus: Greco-Roman Backgrounds to Luke 16:19-31" in *Journal of Biblical Literature*. 106 (1987), pp. 447-463.

[21] ஆபிரகாமின் மடியில், "கடின வேலையோ, கவலையோ, புலம்பலோ இல்லை. அங்கு சமாதானமும், அதிக மகிழ்ச்சியும் முடிவில்லாத வாழ்வுமே உண்டு" என்று யூதர்களுடைய நூலொன்று கூறுகிறது *Testament of Abraham*, 20:14.

[22] R.H.Stein, *Luke: The New American Commentary*, p. 424.

[23] மரணத்தின்பின் பரிசுத்தவான்கள் பரலோகத்திற்கு அல்ல, பரதீசு என்னும் இடத்திற்கே செல்வதாகச் சில கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். ஆனால், பரலோகத்திற்கு யூதர்கள் கொடுத்திருந்த இன்னுமொரு பெயரே பரதீசு என்பதனால், இரண்டையும் வெவ்வேறு இடங்களாகக் கருவது தவறாகும் (W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, p. 593; G.Kittel, & G.Friedrich ed., *Theological Dictionary of the New Testament Volume 1*, pp. 657-658). இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அவருடைய ஆவி பரலோகத்திலிருக்கும் பிதாவிடமே சென்றது (லூக்.23:46). எனவே, அவர் தம்மோடு சிலுவையில் அறையப்பட்டவர்களில் ஒருவனிடம், "இன்றைக்கு நீ என்னோடுகூட பரதீதிசிலிருப்பாய்" (லூக்.23:43) என்று கூறும்போது, அம்மனிதனுடைய ஆவியும் இயேசுகிறிஸ்துவின் ஆவி சென்ற பரலோகத்திற்கே சென்றது. மேலும், 2கொரிந்தியர் 12:2-3ல், அப்போஸ்தலனாகிய பவுல் மூன்றாம் வானத்திற்குச் சென்றதைப் பரதீசுக்குச் சென்றதாகவே குறிப்பிட்டுள்ளார். யூதர்களுடைய மொழிவழக்கில் மூன்றாம் வானம் தேவனுடைய வாசஸ்தலமான பரலோகமாகும் (D.Campbell, W.Johnston, J.Walvoord, & J.Witmer, *The Theological Wordbook*, p. 260). மூன்றாம் வானமான பரலோகத்தைப் பரதீசு என்று பவுல் குறிப்பிடுவதனால் பரலோகமும் பரதீசும் ஒன்றாகவே உள்ளது. இதனால்தான் வெளிப்படுத்தல் 2:7ல் பரதீசிலிருப்பதாகக் குறிப்பிடப்படடுள்ள ஜீவவிருட்சம், வெளிப்படுத்தல் 22:2லும், 22:14லும் பரலோகத்தில் இருப்பதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது ***மரணத்தின் மறுபக்கம்*** என்னும் புத்தகத்தின் 2007ம் ஆண்டின் புதிய விரிவுபடுத்தப்பட்ட பதிப்பில் 64 முதல் 74 வரையிலான பக்கங்களைப் பார்க்கவும்).

விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்'' என்று தெரிவித்துள்ளார் (2கொரி.5:8). வேதாகமத்தில், ''கிறிஸ்துவுடனேகூட இருத்தல்'' என்னும் சொற்பிரயோகம்[24] மரணத்தின் பின்னர் அல்லது, இயேசுகிறிஸ்துவின் வருகையின் பின்னர் விசுவாசிகள் அவருடன் இருப்பதற்கே உபயோகிக்கப்பட்டுள்ளது.[25] எனவே, ''சரீரத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனிருத்தல்'' என்னும் சொற்பிரயோகம், மரணத்தின்பின் இயேசுகிறிஸ்துவோடு இருப்பதையே குறிக்கின்றது.[26] இதனால்தான், ஸ்தேவான் என்னும் பக்தன் மரிக்கும்போது, தன்னை வரவேற்பதற்காக இயேசுகிறிஸ்து பரலோகத்தில் இருப்பதைக் கண்டதோடு,[27] ''கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்'' என்று இயேசுகிறிஸ்துவிடம் தன்னை அர்ப்பணித்தான் (அப்.7:55-56,59).[28] மேலும், ''இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, அவருக்குள் மரித்தவர்களும் அவரோடுகூட வருவதாக'' 1தெசலோனிக்கேயர் 4:14 கூறுவதனால், இயேசுகிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் தற்பொழுது அவரிடமே இருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது.[29] இதனால்தான், கிறிஸ்துவுக்குள் மரித்து தற்பொழுது தேவனுடன் இருப்பவர்களையும், உலகிலிருக்கும் பக்தர்களையும் உள்ளடக்கியதாக கிறிஸ்தவ சபை இருப்பதை எபேசியர் 3:14 அறியத்தருகின்றது. சபையானது ''பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பமாக'' இவ்வசனத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. நீதிமான்களின் ஆவிகள் பரலோகத்தில் தேவனிருக்கும் இடத்தில் இருப்பதாகவே எபிரேயர் 12:22-23 கூறுகிறது.[30] இதனால்தான், கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிப்பதற்காகக் கூடிவரும்போது, அவர்கள் பரலோகத்திலிருக்கும் தேவனுடைய பிரசன்னத்திற்கு மட்டுமல்ல, அங்கிருக்கும் ''பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளின் பிரசன்னத்திற்கும்'' வந்துள்ளதை இவ்வசனங்கள் அறியத்தருகின்றன.[31] உண்மையில், மரித்த பழைய ஏற்பாட்டு பக்தர்களினதும், கிறிஸ்தவர்களினதும் ஆவிகளே எபிரேயர் 12:22-23ல் ''பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

[24] மூலமொழியில் ''சின் கிறிஸ்டோ எய்நாய்'' (*syn Christo einai*) என்றும் சொற்பிரயோகம்

[25] Deissmann, *Light from the Ancient East*, p. 303.

[26] L.Berkhof, *Systematic Theology*, p. 679.

[27] பரமேறுதலின் பின்னர் இயேசுகிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிப்பதாகவே வேதாகமம் கூறுகிறது (ரோ.8:34, கொலோ.3:1, எபி.1:3, 1:13, 8:10, 10:12, 12:2, 1பேது.3:22). ஆனால், ஸ்தேவான் மரிக்கும்போது, இயேசுச்கிறிஸ்து எழுந்து நின்றது, அவனைப் பரலோகத்திற்குள் வரவேற்பதற்காகவே என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் (F.F.Bruce, *The Book of the Acts: The New International Commentary on the New Testament*, p.156)

[28] இவ்விதமாகவே, இயேசுகிறிஸ்துவும் மரிக்கும்போது தம்முடைய ஆவியைப் பரலோகத்திலிருக்கும் பிதாவிடமே ஒப்புவித்தார் (லூக்.23:46).

[29] W.W.Wiersbe, *Be Ready – 1 & 2 Thessalonians*, p. 85.

[30] எபிரேயர் 12:22-24ல் ''நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[31] W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, pp. 816-817. ஆராதனையின்போது பரலோகத்திலிருக்கும் நீதிமான்களின் ஆவிகளிடத்திற்கு நாம் வருவது, அந்த ஆவிகளை வழிபடுவதற்காக அல்ல. பரலோகத்தில் அந்த ஆவிகள் தேவனை ஆராதித்துக் கொண்டிருப்பதனால் (வெளி.6:9-11, 7:9-10) நாமும் அவர்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்கிறவர்களாக இருக்கின்றோம் என்பதையே எபிரேயர் 12:22-23 அறியத்தருகின்றது.

புதிய ஏற்பாட்டின்படி, இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்களின் ஆவிகள் அவர் இருக்கும் பரலோகத்திற்குச் செல்கையில், அவரை அறியாதவர்களின் ஆவிகள் பாதாளத்திற்குச் செல்கின்றன என்பதை லாசருவையும் ஐசுவரியவானையும் பற்றிய உவமை அறியத்தருகின்றது (லூக்.16:22-23). தமிழ் வேதாகமத்தில் “பாதாளம்” என்னும் சொல் இரு ஏற்பாடுகளிலும் ஒரே அர்த்தமுடையதாக இல்லை. ஏனெனில், பழைய ஏற்பாட்டில் “ஷியொல்” (*sheol*) என்னும் எபிரேயச் சொல்லைத் தமிழில் “பாதாளம்” என்று மொழிபெயர்த்தவர்கள், புதிய ஏற்பாட்டில் “ஹேதீஸ்” (*hades*) என்னும் கிரேக்கச் சொல்லையே பாதாளம் என்று குறிப்பிட்டுள்ளனர். பழைய ஏற்பாட்டில் “ஷியொல்” என்பது மரித்தோரின் சரீரங்கள் செல்லும் “கல்லறையை” அல்லது “புதைகுழியைக்” குறிக்கின்றது.[32] இதனால் ஆங்கில வேதாகமத்தில் இச்சொல் “கல்லறை” என்னும் அர்த்தத்தில் grave என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[33] உண்மையில், மரித்தவர்களின் சரீரங்கள் செல்லுமிடமே பழைய ஏற்பாட்டில் “ஷியொல்” (தமிழில் பாதாளம்) என்று அழைக்கப்பட்டுள்ளது.[34] இதனால்தான், வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் மரித்தவர்கள் “பாதாளத்தில் இறங்குவதாகவும் (ஆதி.37:35, 42:38, 44:29, 44:31, எண்.16:30), மரணத்தின் பின் துன்மார்க்கர் மட்டுமல்ல நீதிமான்களும் பாதாளத்திற்குச் (மூலமொழியில் ஷியொல்) செல்வதாகவும் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஏசா.38:10, ஆதி.37:35, 42:38, எண்.16:30, யோபு.17:13-16, 24:19-20, 21:13, 24:19, சங்.31:17). பழைய ஏற்பாட்டில் பாதாளம் மரித்தோரின் சரீரங்கள் வைக்கப்படும் கல்லறையாக இருப்பதினாலேயே அங்கு புழுக்களும் பூச்சிகளும் இருப்பதாகவும் வேதாகமம் கூறுகிறது (ஏசா.14:11, யோபு.17:13-14, 24:19-20).[35] எனவே, பழைய ஏற்பாட்டில் ஷியொல் (தமிழில் பாதாளம்) என்னும் சொல் மரித்தோரின் சரீரங்கள் செல்லும் இடமான கல்லறையை அல்லது புதைகுழியையே குறிக்கின்றது.[36] ஆனால், புதிய ஏற்பாட்டின் தமிழ் மொழிபெயர்ப்பில்

---

[32] S.D.Renn, *Expository Dictionary of Bible Words*, p. 450; R.L.Harrris, “Why Hebrew Sheol Translated Grave” in *The NIV: The Making of a Contemporary Translation*. pp. 75-92.

[33] பழைய ஏற்பாட்டில் 65 தடவைகள் இடம்பெறும் இச்சொல் ஆங்கில வேதாகமங்களில் வித்தியாசமான அர்த்தங்களுடன் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. KJV மொழிபெயர்ப்பில் 31 தடவைகள் நரகம் என்றும், 31 தடவைகள் கல்லறை என்றும் 3 தடவைகள் குழி என்றும் மொழிபெயர்க்கப்பட்டுளளது. NIV மொழிபெயர்ப்பில் 55 தடவைகள் கல்லறை என்றும், 6 தடவைகள் மரணம் என்றும், ஏனைய இடங்களில் இன்னும் வித்தியாசமான மூன்று வார்த்தைகளும் உள்ளன. NASB மொழிபெயர்ப்பில் இச்சொல் மொழிபெயர்க்கப்படாமல் “ஷியொல்” என்றே உள்ளபோதிலும், 34 இடங்களில் பாதாள உலகம் என்னும் விளக்கம் அடிக்குறிப்பில் உள்ளது.

[34] R.L.Harris, “Why the Hebrew Sheol Was Translated Grave in *The NIV: The Making of a Contemporary Translation*, p. 78; P.Enns, *The Moody Handbook of Theology*, p. 374; L.O.Richards, *Expository Dictionary of Bible Words*, p. 336. பழைய ஏற்பாட்டில் “ஷியொல்” என்னும் சொல் சில வசனங்களில் துன்மார்க்கருடன் தொடர்புள்ளவிதத்தில் இருப்பதனால் ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமம் 31 தடவைகள் இச்சொல்லை நரகம் என்று மொழிபெயர்த்துள்ளது (P.S.Johnston, *Shades of Sheol: Death and Afterlife in the Old Testament*, p. 73). ஆனால், பழைய ஏற்பாட்டில் “ஷியொல்” என்னும் சொல் நீதிமான்கள் செல்லுமிடமாகவும் இருப்பதனால் இதை நரகம் என்று மொழிபெயர்க்கமுடியாது. ஏனைய இடங்களில் ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமம் ஷியொல் என்பதைக் கல்லறை என்றே மொழிபெயர்த்துள்ளது. ஆனால் தமிழ் வேதாகமம் இவ்விடங்களிலும் பாதாளம் என்னும் சொல்லை உபயோகித்துள்ளது (உதாரணத்திற்கு ஆதி.37:35, 42:38, 44:22, 44:29, 1ராஜா.2:6, 2:9 என்னும் வசனங்களில் ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமத்தில் கல்லறை என்னும் வார்த்தையே உள்ளது).

[35] A.Heidel, “Death and After Life” in *The Gilgamesh Epic and Old Testament Parallels*, p. 180.

[36] R.L.Harris, “The Meaning of the Word Sheol as Shown by Parallels in Poetic Texts” in *Bulletin of the Evangelical Theological Society*. 4 (1961), pp. 129-135; R.L.Harrris, “Why Hebrew Sheol Translated Grave” in *The NIV: The Making of a Contemporary Translation*. pp. 75-92. R.L.Harris, G.L.Archer & B.K.Waltke, ed.

"பாதாளம்" என்னும் சொல், (மூலமொழியில் "ஹேதீஸ்" என்னும் சொல்) துன்மார்க்கரின் ஆவிக்குரிய பகுதி செல்லுமிடத்தைக் குறிக்கின்றது.[37] எனவே, மரணத்தின்பின் தேவனை அறியாதவர்களின் ஆவிகள் ஹேதீஸ் என்னுமிடத்திற்குச் செல்கையில், தேவனை அறிந்தவர்களின் ஆவிகள் தேவனிடம் செல்கின்றன என்பதே வேதாகமம் அறியத்தரும் சத்தியமாகும்.

**2. மரித்தோரின் ஆவிகளினால் இவ்வுலகத்திற்கு வரமுடியாது**

மரித்தோரின் ஆவிகள் எங்கு செல்கின்றன என்பதைத் தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தின் மூலம் அறிந்துகொண்ட நாம், அவ்வாவிகளினால் மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வரமுடியுமா என்பதையும் வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியம். இவ்வுலகத்தைவிட்டுச் செல்லும் மரித்தோரின் ஆவிகளினால் மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வரமுடியாது என்றே வேதாகமம் கூறுகிறது. இயேசுகிறிஸ்து லாசருவையும் ஐசுவரியவானையும்பற்றிய உவமையில் இதைப்பற்றி நேரடியாகவே குறிப்பிட்டுள்ளார். இவ்வுவமையில் லாசரு என்பவனுடைய ஆவி மரணத்தின் பின்னர் ஆபிரகாமின் மடிக்கும், ஐசுவரியவானின் ஆவி பாதாளத்திற்கும் செல்கின்றன. பாதாளத்தில் இருக்கும் ஐசுவரியவான் தன்னுடைய வேதனை காரணமாக லாசருவை அனுப்பும்படி பரலோகத்தில் இருக்கும் ஆபிரகாமிடம் கேட்கின்றான் (லூக்.16:23-26). ஆனால் ஆபிரகாமோ, மரித்தோரின் ஆவிகளினால் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்து எவ்விதத்திலும் வெளியே செல்லமுடியாது என்பதை அறியத்தந்துள்ளார். இதை ஐசுவரியவானுக்குச் சுட்டிக்காட்டும் ஆபிரகாம், "இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்" (லூக்.16:26). மரணத்தின்பின் மரித்தோரின் ஆவிகள் எங்கு செல்கின்றனவோ, அங்கிருந்து அவைகளினால் வெளியே வரமுடியாது என்பதையே ஆபிரகாமின் வார்த்தைகள் அறியத்தருகின்றன.[38] மூலமொழியில் இவ்வாக்கியத்தித்தின் இலக்கண அமைப்பு முறை, இது தேவனால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.[39] எனவே, மரித்தோரின் ஆவிகள் மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வருகின்றன என்று கூறுவது தேவனால் ஏற்படுத்தப்பட்டுள்ள செயல்முறையையே முரண்படுத்தும் தவறான ஒரு போதனையாகவே உள்ளது.

---

*Theological Wordbook of the Old Testament*, pp. 892-893. இதைத் தவிர "கல்லறை" ("கீபர்" (*qeber*) என்னும் எபிரேயச் சொல்) "குழி" ("போர்" (*bor*) என்னும் எபிரேயச் சொல்) "பூமியின் கீழ்" என்னும் அர்த்தமுடைய சொற்களும் மரித்தோரின் சரீரங்கள் செல்லுமிடத்தைக் குறிப்பிடுவதற்குப் பழைய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ளன (R.L.Harris, G.L.Archer, & B.K.Waltke, *Theological Wordbook of the Old Testament Volume 2*, pp. 892-893).

[37] C.Brown, ed., *The International Dictionary of NT Theology, Vol.2,* p. 205.

[38] L.Morris, *Luke: Tyndale New Testament Commentaries*, p. 277.

[39] R.H.Stein, *Luke: The New American Commentary*, p. 425.

மரித்தோரின் ஆவிகள் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வருவதில்லை என்பதை மாத்திரமல்ல, அவ்வாவிகளை மறுபடியும் இவ்வுலகத்திற்கு அனுப்புவது தேவனுடைய சித்தம் அல்ல என்பதையும் லாசருவையும் ஐசுவரியவானையும்பற்றிய உவமை அறியத்தருகின்றது. மரணத்தின் பின்னர் லாசருவினால் தான் இருக்கும் இடத்திற்கு வரமுடியாது என்பதை அறிந்துகொண்ட ஐசுவரியவான் (லூக்.16:24-26), அவனைத் தன்னுடைய தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி ஆபிரகாமிடம் கேட்டான் (லூக்.16:27-28). ஐசுவரியவானின் இக்கோரிக்கைக்கு ஆபிரகாம் கொடுத்த பதில், உலகிலிருப்போருக்கு சத்தியத்தை அறிவிப்பதற்கு மரித்தோரை அனுப்புவது தேவனுடைய சித்தம் அல்ல என்பதைத் தெளிவாகக் காண்பிக்கின்றது. இதனால்தான், தன்னுடைய சகோதரர்கள் தானிருக்கும் இடத்திற்கு வந்து வேதனைப்படாதபடி அவர்களை எச்சரிப்பதற்காக அவர்களிடம் லாசருவை அனுப்பும்படி கேட்ட ஐசுவரியவானுக்கு, "அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும்" என்று ஆபிரகாம் கூறினார் (லூக்.16:29). ஆபிரகாமின் கூற்றில் "மோசேயும் தீர்க்கதரிசிகளும்" பழைய ஏற்பாட்டையே குறிக்கின்றது. ஏனெனில், அக்காலத்தில் பழைய ஏற்பாடானது "மோசேயினதும், தீர்க்கதரிசிகளினதும் ஆகமங்கள்" என்று (லூக்.24:27, 24:44, அப்.28:23), அல்லது "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகளும்" (லூக்.16:16, யோவா.1:45) என்று அழைக்கப்பட்டது.[40] இதிலிருந்து, மரித்தோரின் ஆவிகள் மூலமாக அல்ல, எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தின் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதே மனிதரைத் தேவன் சந்திக்கும் முறை என்பது தெளிவாகின்றது.[41] மரித்தோரை மறுபடியும் இவ்வுலகத்திற்கு அனுப்புவது தேவனுடைய சித்தம் அல்ல என்பதனால், மரித்தோரின் ஆவிகளினால் மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வரமுடியாது. இதனால்தான், தேவன் பல தடவைகள் தம்முடைய தூதர்களை இவ்வுலகத்திற்கு அனுப்பியுள்ளபோதிலும், அவர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மரித்தோரின் ஆவிகளை இவ்வுலகத்திற்கு அனுப்பியுள்ளதாக வேதாகமத்தில் எவ்விதக் குறிப்பும் இல்லை.

மரித்தோர் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வருவதில்லை என்பதை 2சாமுவேல் 12:15-23ல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் சிறப்பான விதத்தில் அறியத்தருகின்றது. இச்சம்பவத்தில் தேவனுடைய தண்டனை காரணமாக மரிக்கும் நிலையை அடைந்த தன்னுடைய பிள்ளைக்காக ஏழு நாட்கள் உபவாசித்து ஜெபித்த தாவீது, பிள்ளை மரித்த பின்னர் ஜெபிப்பதைவிட்டுவிட்டான். மேலும், பிள்ளை மரிக்கும் வரை எதுவும் சாப்பிடாமல் வேதனையோடு இருந்தவன், பிள்ளை மரித்த பின்னர் ஆலயத்திற்குச் சென்று தேவனை வழிபட்டதோடு சாப்பிடவும் செய்தான். இதற்குக் காரணம், பிள்ளை உயிரோடிருக்கும் வரை தேவனால் அப்பிள்ளையைக் காப்பாற்ற முடியும் என்னும்

---

[40] அக்காலத்தில் யூதர்கள் பழைய ஏற்பாட்டை நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகளும் என்று குறிப்பிட்டதினால், மோசேயும் தீர்க்கதரிசிகளும் என்பது லூக்காவினால் உருவாக்கப்பட்ட சொற்பிரயோகம் என்று வேதஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (J.Nolland, *Luke: Word Biblical Commentary Volume 35*, p. 831).

[41] இதனால்தான், வேதாகமம் "கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களாக" உள்ளன (2தீமோ.3:15).

நம்பிக்கையுடனிருந்த தாவீது, பிள்ளை மரித்த பின்னர், அது மறுபடியுமாகத் தன்னிடம் வராது என்பதை அறிந்திருந்ததேயாகும். இதனால், அவன் பிள்ளைக்காக ஜெபிப்பதை நிறுத்திவிட்டான். 2சாமுவேல்12:15-23ல் இதைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> அப்பொழுது கர்த்தர் உரியாவின் மனைவி தாவீதுக்குப் பெற்ற ஆண்பிள்ளையை அடித்தார். அது வியாதிப்பட்டுக் கேவலமாயிருந்தது. அப்பொழுது தாவீது அந்தப் பிள்ளைக்காகத் தேவனிடத்தில் பிரார்த்தனைபண்ணி, உபவாசித்து, உள்ளே போய், இராமுழுதும் தரையிலே கிடந்தான். அவனைத் தரையிலிருந்து எழுந்திருக்கப்பண்ண, அவன் வீட்டிலுள்ள மூப்பரானவர்கள் எழுந்து, அவனண்டையில் வந்தாலும், அவன் மாட்டேன் என்று சொல்லி, அவர்களோடே அப்பம் சாப்பிடாமல் இருந்தான். ஏழாம்நாளில், பிள்ளை செத்துப்போயிற்று. பிள்ளை செத்துப்போயிற்று என்று தாவீதின் ஊழியக்காரர் அவனுக்கு அறிவிக்க ஐயப்பட்டார்கள். பிள்ளை உயிரோடிருக்கையில், நாம் அவரோடே பேசுகிறபோது, அவர் நம்முடைய சொற்கேட்கவில்லை. பிள்ளை செத்துப்போயிற்று என்று அவரோடே எப்படிச் சொல்லுவோம்? அதிகமாக வியாகுலப்படுவாரே என்று பேசிக் கொண்டார்கள். தாவீது தன் ஊழியக்காரர் இரகசியமாய்ப் பேசிக்கொள்கிறதைக் கண்டு, பிள்ளை செத்துப்போயிற்று என்று அறிந்து, தன் ஊழியக்காரரை நோக்கி: பிள்ளை செத்துப் போயிற்றோ என்று கேட்டான். செத்துப்போயிற்று என்றார்கள். அப்பொழுது தாவீது தரையைவிட்டு எழுந்து, ஸ்நானம்பண்ணி, எண்ணெய் பூசிக்கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி,[42] கர்த்தருடைய ஆலயத்திலே பிரவேசித்து, பணிந்துகொண்டு, தன் வீட்டுக்கு வந்து, போஜனம் கேட்டான். அவன் முன்னே அதை வைத்தபோது புசித்தான். அப்பொழுது அவன் ஊழியக்காரர் அவனை நோக்கி: நீர் செய்கிற இந்தக் காரியம் என்ன? பிள்ளை உயிரோடிருக்கையில் உபவாசித்து அழுதீர். பிள்ளை மரித்த பின்பு, எழுந்திருந்து அசனம்பண்ணுகிறீரே என்றார்கள். அதற்கு அவன்: பிள்ளை இன்னும் உயிரோடிருக்கையில், பிள்ளை பிழைக்கும்படிக்குக் கர்த்தர் எனக்கு இரங்குவாரோ, எப்படியோ, யாருக்குத் தெரியும் என்று உபவாசித்து அழுதேன். அது மரித்திருக்கிற இப்போது நான் உபவாசிக்க வேண்டியது என்ன? இனி நான் அதைத் திரும்பிவரப்பண்ணக் கூடுமோ? நான் அதினிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை என்றான் (2சாமு.12:21-23)

தாவீதின் செயல்களும் அவனுடைய பேச்சும், மரித்தோரைப்பற்றி அவன் அறிந்திருந்த வேதாகம சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன.[43] மரித்தோரினால் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரமுடியாது என்பதைத் தாவீது அறிந்திருந்ததினால், பிள்ளை

---

[42] மூலமொழியின்படி, 16ம் வசனத்தில் துயரகாலத்தில் அவன் இரட்டாடைகளை அணிந்திருந்தான் (R.P.Gordon, *1 & 11 Samuel: Library of Biblical Interpretation*, p. 259). சணல் நூலினால் செய்யப்படும் ஆடைகளே இரட்டாடைகளாகும். அக்கால மக்கள் துயரத்தில் அழுது புலம்பம்போது இத்தகைய ஆடைகளை அணிவது வழக்கம். இதனால் துயரத்தின் முடிவில் அவன் தனது வழக்கமான ராஜ வஸ்திரத்தைதத் தரித்துக்கொண்டான் (R.F.Youngblood, *1,2 Samuel: The Expositor's Bible Commentary Volume 3*, p. 948).

[43] C.J.Barber, *The Books of Samuel Volume 2*, p. 193.

மரிக்கும் வரை அழுது புலம்பி உபவாசத்துடன் ஜெபித்தான். ஆனால் பிள்ளை மரித்தவுடன் ஜெபிப்பதை நிறுத்திவிட்டான்.[44] மரித்தோர் "திரும்பி வராத வழியே போகிறவர்களாகவும்" (யோபு.16:22), "போனால் திரும்பி வராத தேசத்துக்குப் போகிறவர்களாகவும்" (யோபு.10:21) இருப்பதைத் தாவீது அறிந்திருந்தான்.[45] இதனால்தான், "மரித்த பிள்ளை சென்ற இடத்திற்கு நான் செல்வேனேயல்லாமல் அப்பிள்ளை என்னிடத்திற்கு வராது" என்று அவன் கூறினான்.[46] "உலகத்திலிருப்பவர்கள் மரித்தோரிடம் செல்வார்களே தவிர, மரித்தோர் இவ்வுலகத்திற்கு வரமாட்டார்கள்"[47] என்பதை அவன் அறிந்திருந்தான்.

வேதாகமக் காலத்தில் மரித்த ஒரு சிலர் உயிர்ப்பிக்கப்பட்டது உண்மை என்றாலும், அவர்கள் மறுபடியுமாக மரித்தார்கள். மேலும், இவை தேவனுடைய வல்லமை வெளிப்பட்ட அற்புதச் சம்பவங்களாகவே உள்ளன. இவை வழக்கமாக நடைபெறும் காரியம் அல்ல. "சாதாரண இயற்கை விதிமுறைகளுக்கும் அப்பால் தேவன் செய்யும் காரியமே அற்புதம்"[48] என்பதனால் அற்புதச் சம்பவங்களை வழமையாக நடைபெறும் சாதாரண செயல்களாகக் கருதுவது தவறாகும். இதனால், வேதாகமத்தில் மரித்தோர் உயிர்ப்பிக்கப்பட்ட சம்பவங்களை, மரித்தோரின் ஆவிகள் இவ்வுலகத்திற்கு வருவதற்கான ஆதாரமாக எடுக்கமுடியாது. மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டவர்கள் ஆவிகளாக அல்ல சரீரங்களுடனேயே இவ்வுலகத்திற்கு வந்தனர். உண்மையில், இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போதே அவருக்குள் மரித்தவர்கள் அவரோடு

---

[44] தாவீதின் நடத்தை நம்முடைய நடைமுறைவாழ்வுக்கு மாபெரும் சத்தியத்தைக் கற்பிக்கின்றது. அதாவது, நெருக்கடியான சூழ்நிலையில் ஜெபம் உட்பட நம்மால் செய்யக்கூடிய அனைத்தையும் நாம் செய்யவேண்டும். அப்படியிருந்தும் எதுவும் பலனளிக்காவிட்டால், அழுது புலம்பித் தவிக்காமல், நடந்ததை வாழ்வின் யதார்த்தமான ஒரு காரியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் (K.L.Chafin, *1 & 2 Samuel: The Preacher's Commentary*, pp. 284-285). பிள்ளை மரித்த பின்னர் ஆலயத்திற்குச் சென்ற தாவீது தேவனை வழிபடுகிறவனாகவே இருந்தான். அவன் முறுமுறுக்கிறவனாகவோ, தன் நிலைபற்றி தேவனிடம் முறையிடுகிறவனாகவோ இருக்கவில்லை. அவன் தேவனுடைய செயலை ஏற்றுக்கொண்ட மனநிலையில் இருந்தான் (R.C.Sproul, *The Invisible Hand: Do All Things Really Work for Good?* P. 10). மேலும், பிள்ளை மரித்த பின்னர் அழுது புலம்பி ஜெபிப்பதை நிறுத்திய தாவீது தேவனை வழிபட்டதற்குக் காரணம், அவன் தேவனுடைய செயலை, அதாவது தனது பாவத்திற்கு அவர் கொடுத்த தண்டனையை ஏற்றுக்கொண்டதேயாகும் (J.Baldwin, *1 and 2 Samuel: Tyndale Old Testament Commentaries*, p. 240). தேவன் தன்னுடைய ஜெபத்தைக் கேட்கவில்லையே என்று அவன் குழப்பமடையவில்லை. தேவனுடைய பதிலை, அதாவது அவர் தன்னுடைய பாவத்துக்குக் கொடுத்த தண்டனையை முழுமையாக ஏற்றுக்கொண்டதினாலேயே உபவாச ஜெபத்தை நிறுத்தி தேவனை வழிபடத் தொடங்கினான் (W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 336).

[45] R.F.Youngblood, *1,2Samuel: The Expositor's Bible Commentary Volume 3*, pp. 948-949.

[46] H.F.Vos, *1,2 Samuel: Bible Study Commentary*, p. 130. தாவீதின் வார்த்தைகள் அதாவது, "தன்னுடைய பிள்ளை மறுபடியும் தன்னிடத்திற்கு வராது, ஆனால் தான் அப்பிள்ளை சென்ற இடத்திற்குச் செல்வேன்" என்னும் கூற்று, பிள்ளைகள் தாங்களாகவே சுயமாக இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் காலம் வருவதற்கு முன்னர் மரித்தால் அவர்கள் பரலோகத்திற்குச் செல்வார்கள் என்பதற்கான ஆதாரமாக உள்ளது (W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 335; J.MacArthur, *The MacArthur bible Commentary*, p. 368). இதற்கு ஆதாரமாக புதிய ஏற்பாட்டில் இரண்டு வசனங்கள் இருப்பதாகக் கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். இவற்றில் ஒன்று, சிறு பிள்ளைகளை ஆசீர்வதித்த இயேசுகிறிஸ்து "பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" என்று கூறியதாகும் (மத்.19:14, மாற்.10:13-16). மற்றது விசுவாசப் பெற்றோருக்குப் பிறக்கும் பிள்ளைகள் பரிசுத்தமாயிருப்பதைப் பவுல் சுட்டிக்காட்டிதாகும் (1கொரி.7:14). "பிள்ளை உயிரோடிருக்கும் வரை அது குணமடைவதற்காக உபவாசித்து ஜெபித்த தாவீது, பிள்ளை மரித்த பின்னர் அழுவதையும் ஜெபிப்பதையும் நிறுத்தி தேவனை வழிபட்டதற்குக் காரணம், அப்பிள்ளை தேவனிடம் சென்றுவிட்டது என்பதை அவன் அறிந்திருந்ததேயாகும்" (W.C.Kaiser, *Hard Sayings of the Bible*, pp. 222-223).

[47] E.H.Merrill, *1 Samuel: The Bible Knowledge Commentary – Old Testament*, 468.

[48] J.F.MacArthur, *The Charismatic Chaos*, pp. 127-128.

இவ்வுலகத்திற்கு வருவார்கள் (1தெச.4:14).[49] அதுவரையில் மரித்தவர்களோ, இல்லையென்றால் அவர்களுடைய ஆவிகளோ இவ்வுலகத்திற்கு வருவதில்லை. ஏனென்றால் அவைகள் மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வரமுடியாத நிலையில் உள்ளன. மேலும், அவற்றை இவ்வுலகத்திற்கு அனுப்புவதும் தேவனுடைய சித்தம் அல்ல.

“கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்” (வெளி.14:13) என்று வேதாகமம் கூறுவதனால், அவர்களுடைய ஆவிகள் இவ்வுலகில் செயல்படும் நிலையில் இருப்பதில்லை. அவைகள் இவ்வுலக செயற்பாடுகளிலிருந்து ஓய்வுபெறுகின்றது. மரணத்தின் பின்னர் தேவனிடம் செல்லும் நீதிமான்களின் ஆவிகள் “இளைப்பாறுதலடைவதாகவும்” பாதாளத்திற்குச் செல்லும் துன்மார்க்கரின் ஆவிகள் “வேதனைப்படுவதாகவும்” இயேசுகிறிஸ்து லாசருவையும் ஐசுவரியவானையும் பற்றிய உவமையில் தெரிவித்துள்ளார் (லூக்.16:25). இதுவே மரணத்தின் பின்னர் மரித்தோரின் ஆவிகளுக்குத் தேவன் நிர்ணயம்பண்ணியுள்ள நிலையாக உள்ளது. இதனால், இந்நிலையைமீறி அவற்றினால் செயற்படமுடியாது.

### 3. பிசாசுகளின் ஆவிகளே இவ்வுலகத்தில் உலாவுகின்றன

மனிதர்கள் மரிக்கும்போது அவர்களுடைய சரீரத்தைவிட்டுச் செல்லும் ஆவிகள் மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வருவதில்லை என்பது தேவனுடைய வார்த்தையான வேதாகமம் நமக்கு அறியத்தரும் சத்தியமாகும். இது உண்மை என்றால், மரித்தோரின் ஆவிகள் தங்களோடு தொடர்புகொள்வதாகவும், ஆலோசனைகள் தருவதாகவும் கூறுகிறவர்களின் அனுபவங்கள் எத்தகையவை என்பதை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். மரித்தோரின் ஆவிகள் இவ்வுலகத்திற்கு வருவதில்லை என்று வேதாகமம் கூறுவதனால், எவராலும் மரித்தோரின் ஆவிகளுடன் தொடர்புகொள்ள முடியாது. உண்மையில், மரித்தோரின் ஆவிகள் அல்ல, பிசாசின் ஆவிகளே இவ்வுலகத்தில் உலாவுவதாக வேதாகமம் கூறுகிறது. “உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்” என்பதை அறியத்தரும் வேதாகமம் (1பேது.5:8), அவன் “ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வான்” (2கொரி.11:14) என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. மேலும், சாத்தான் அற்புதங்கள் செய்யும் ஆற்றல் உள்ளவனாகவும் இருப்பான் என்றும் வேதாகமம் கூறுகிறது (மத்.24:24, 2தெச.2:9). எனவே, சாத்தானும் அவனுடைய தூதர்களான பிசாசுகளுமே (மத்.12:24, 25:41)[50] மரித்தோரின் உருவத்தில்

---

[49] 1தெசலோனிக்கேயர் 4:14ல் “இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே. அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[50] மத்தேயு 25:41ல் “பிசாசும் அவனுடைய தூதர்களும்” என்பதில், பிசாசு சாத்தானையும், அவனுடைய தூதர்கள் பிசாகளையும் குறிக்கின்றன (P.Enns, *The Moody Handbook of Theology*, p. 296). மத்தேயு 12:24ல் பிசாசுகளின் தலைவனாகிய சாத்தான் “பெயல்செபூல்” என்று குறிப்பிடப்பட்டுள்ளான். “பெயல்செபூல்” என்பது யூதர்கள் பெலிஸ்தரின் தெய்வத்தை இழிவுபடுத்திக்கூறும் முறையாக இருந்தது. இதனர்த்தம் “மலத்தின் அல்லது குப்பையின் தெய்வம்” ஆகும். எனினும், இப்பெயர் “உயர்வான இடங்களின் அல்லது வாசஸ்தலத்தின் தெய்வம்” என்னும் அர்த்தத்தில் கானானியர்களின் தெய்வமாக

மனிதர்களிடம் வந்து அவர்களை வஞ்சிக்கின்றன (1தீமோ.4:1) என்பதே தேவனுடைய வார்த்தையான வேதாகமம் அறியத்தரும் உண்மையாகும். “பிசாசுகளினால் மரித்தோரைப்போல தோற்றமளிக்கமுடியும் என்றாலும், அவைகளினால் மரித்தோரை இவ்வுலகத்திற்குக் கொண்டுவரமுடியாது.”[51] ஏனென்றால், மரித்தோரின் ஆவிகள்மீது பிசாசுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. தேவனுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் மரித்தோரின் ஆவிகளுடன் பிசாசுகளினால் தொடர்புகொள்ளமுடியாது. ஆனால், அவைகள் மரித்தோரைப்போலக் காட்சியளித்து மக்களை வஞ்சிக்கின்றன.

மரித்தோரின் ஆவிகளுடன் தொடர்புகொள்வதாகக் கூறுபவர்கள் உண்மையில் பிசாசின் ஆவிகளின் உதவியுடனேயே செயற்படுகின்றனர். இவர்களுடைய செயல்கள் மூலம், பிசாசின் ஆவிகள் மரித்தோரின் உருவத்தில் வந்து மக்களை வஞ்சிக்கின்றன என்றே வேதாகமம் கூறுகிறது. வேதாகமத்தில் மரித்தோரின் ஆவிகளிடம் தொடர்பு கொள்வதாகக் கூறுபவர்கள் “அஞ்சனம் பார்ப்பவர்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வேதாகமத்தின் மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள எபிரேயச் சொல் ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமத்தில் having familiar spirits என்று விளக்கமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[52] இதன் அர்த்தம், “கீழ்ப்படிவுள்ள அல்லது பணிவிடை செய்கின்ற பிசாசுகளை வைத்திருத்தல்” ஆகும்.[53] உண்மையில், இத்தகைய மனிதர்களுக்குள் பிசாசுகள் குடியிருப்பது வழக்கம்.[54] இவர்களுக்குள் நல்ல ஆவிகள், அதாவது பரிசுத்த ஆவியோ அல்லது தேவதூதர்களோ இருப்பதில்லை. தீய ஆவிகளான பிசாசின் ஆவிகளே இவர்களுக்குள் இருக்கும்.[55] உண்மையில், அஞ்சனம் பார்ப்பவர்கள் தங்களுக்குள் குடியிருக்கும் பிசாசுகளின் உதவியுடனேயே செயற்படுகின்றனர். இதனால்தான், 1சாமுவேல் 28:7ல் “அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீ” என்பது மூலமொழியில் “குறிசொல்லும் பிசாசையுடைய பெண்” என்று உள்ளது.[56] ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமத்தில் a woman that hath a familiar spirit அதாவது, “பணிவிடைசெய்யும் பிசாசையுடைய பெண்” என்று இவ்வாக்கியம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் இத்தகைய அர்த்தம் நேரடியாக வெளிப்படும் விதத்திலேயே இவ்வாக்கியம் உள்ளது. எனவே, மரித்தோரின் ஆவிகளிடம் தொடர்பு கொள்வதாகக் கூறுபவர்கள் பிசாசுகளின்

---

அறியப்பட்டிருந்தது. 2ராஜாக்கள் 2:1ல் இத்தெய்வம் “பாகால்சேபூப்” என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இது பெலிஸ்தியப் பட்டணங்களில் ஒன்றான எக்ரோன் என்னும் பட்டணத்தாரின் தெய்வமாகும் (2ராஜா.1:3). யூதர்கள் இப்பெயரை விகாரப்படுத்தி, பெலிஸ்மதின் தெய்வத்தை இழிவுபடுத்தியதோடு, தீயவைகளைக் குறிப்பிடுவதற்கும் உபயோகித்தனர். இயேசுகிறிஸ்துவின் காலத்தில் சாத்தானைக் குறிப்பிட யூதர்கள் இப்பெயரை உபயோகித்தனர் (L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, pp. 259-260).

51 H.F.Vos, *1,2 Samuel: Bible Study Commentary*, p. 93.

52 ஆங்கிலத்தில் NEB மற்றும் REB மொழிபெயர்ப்புகளிலும் இவ்வாக்கியம் இவ்விதமாகவே உள்ளது. ஏனைய மொழிபெயர்ப்புகளில் “மரித்தோரின் ஆவிகளுடன் தொடர்புகொள்ளுகிறவர்கள்” என்னும் வாக்கியம் தவறான மொழிபெயர்ப்பாகவே உள்ளது. ஏனெனில் மரித்தோரின் ஆவிகளுடன் எவராலும் தொடர்பு கொள்ளமுடியாது.

53 ஆங்கில அகராதியில் demon supposedly attending and obeying a witch என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

54 M.F.Unger, *Biblical Demonology: A Study of Spiritual Forces at Work Today*, p. 144.

55 J.L.Nevius, *Demon Possession and Allied Themes*, pp. 320-332.

56 H.F.Vos, *1,2 Samuel: Bible Study Commentary*, p. 93.

உதவியுடன் செயல்படுகிறார்கள் என்றே வேதாகமம் கூறுகிறது.[57] உண்மையில், அஞ்சனம் பார்ப்பவர்கள் மரித்தோரின் ஆவிகளை அல்ல, மரித்தோரைப்போல நடிக்கக்கூடிய பிசாசுகளையே மனிதர் காணும்படி செய்கின்றனர். வேதாகமத்தில் "செத்தவர்களிடத்தில் குறிகேட்டல்" என்னும் சொற்பிரயோகமும் (உபா.18:11) பிசாசுகளிடத்தில் குறிகேட்பதையே குறிக்கின்றது.[58]

அஞ்சனம் பார்ப்பவர்கள், தாங்கள் மரித்தோரின் ஆவிகளுடன் தொடர்பு கொள்வதாகக் கூறி மற்றவர்களை ஏமாற்றுகிறவர்களாக உள்ளனர்.[59] ஏனெனில், இவர்களால் மரித்தோரின் ஆவிகளுடன் தொடர்புகொள்ளமுடியாது. இத்தகைய செயல்கள் பிசாசின் செல்வாக்கிற்கு உட்பட்டவைகளாகவே உள்ளன.[60] அஞ்சனம் பார்ப்பவர்கள் மரித்தோரின் ஆவிகளிடத்தில் அல்ல, பிசாசுகளின் ஆவிகளிடமே தொடர்பு கொள்கின்றனர்.[61] இதனால் இத்தகைய செயல்களில் ஈடுபடவேண்டாம் என்று கூறும் தேவன், இவற்றுக்கு மரணதண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்:

> அஞ்சனம்பார்க்கிறவர்களை நாடி, குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள். அவர்களாலே தீட்டுப்படவேண்டாம். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் (லேவியராகமம் 19:31).
>
> மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம் (உபாகமம் 18:11).
>
> அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் பின்தொடர்ந்து சோரம்போக எந்த ஆத்துமா அவர்களை நாடுகிறானோ, அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக எதிர்த்துநின்று, அவனைத் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகப்பண்ணுவேன் (லேவியராகமம் 20:6).
>
> அஞ்சனம் பார்க்கிறவர்களும் குறிசொல்லுகிறவர்களுமாயிருக்கிற புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கொலைசெய்யப்பட வேண்டும் (லேவியராகமம் 20:27).

மரித்தோரின் ஆவிகளுடன் தொடர்புகொள்ள முற்படுவது தேவன் வெறுக்கும் ஒரு காரியமாகவே உள்ளது. இதற்குக் காரணம் இவை பிசாசின் வஞ்சிக்கும் செயல்களாக இருப்பதேயாகும். உண்மையில் உலகிலிருக்கும் எந்த ஒரு மனிதனாலும் மரித்தோரின் ஆவிகளுடன் தொடர்புகொள்ள முடியாது. பிசாசுகளே மரித்தோரைப்போல தோற்றமளித்து, மரித்தோரைப்போல பேசி மக்களை வஞ்சித்து வருகின்றன. இதனால் தம்முடைய ஜனங்கள் இத்தகைய வஞ்சனைகளில் அகப்பட்டுத் தவறான வழிகளில்

---

[57] BKC, p. 454.
[58] L.Goldberg, *Deuteronomy: Bible Study Commentary*, p. 109.
[59] M.F.Rooker, *Leviticus: The New American Commentary*, p. 263.
[60] R.K.Harrison, *Leviticus: Tyndale Old Testament Commentary*, p. 202.
[61] H.F.Vos, *1,2 Samuel: Bible Study Commentary*, p. 93.

செல்வதைத் தடுப்பதற்காகத் தேவன் இதற்கு எதிராகக் கடுமையான கட்டளைகளைக் கொடுத்துள்ளார்.

## இரண்டாம் அத்தியாயம்

## சர்ச்சைக்குரிய பகுதிகளுக்கு சரியான பதில்கள்

மரித்தோரின் ஆவிகளினால் மனிதர்களோடு தொடர்புகொண்டு அவர்களுக்கு ஆலோசனையளிக்க முடியும் என்னும் தவறான உபதேசத்திற்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டப்படும் வேதப்பகுதி 1சாமுவேல் 28:3-25 ஆகும்.[62] இவ்வசனங்களில், இஸ்ரவேல் ராட்சியத்தின் முதலாவது அரசனான சவுல் என்பவனோடு,[63] மரித்துப்போன தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் ஆவி பேசியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[64] இதனால் மரித்தோரின் ஆவிகளினால் உயிரோடிருக்கும் மனிதருக்கு ஆவிக்குரிய ஆலோசனையும் வழிநடத்துதலும் கொடுக்கமுடியும் என்று சிலர் வாதிடுகின்றனர். மரித்தோரின் ஆவிகளினால் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரமுடியாது என்னும் வேதாகமப் போதனையை முரண்படுத்தும் விதத்தில் இச்சம்பவம் இருப்பதாகப் பலர் எண்ணுவது வழக்கம். வேதாகமத்தில் இதற்கு ஒப்பான அல்லது இதைப்போன்ற வேறு சம்பவங்கள் எதுவும் இல்லை.[65] மேலும், இது தெளிவற்ற ஒரு பகுதியாக, வாசிப்பவருக்குப் பல குழப்பங்களை ஏற்படுத்தும் விதத்தில் உள்ளது. உதாரணத்திற்கு, தன்னிடம் வந்திருப்பது சவுல் என்பதை அஞ்சனம் பார்க்கும் பெண் எப்படி அறிந்துகொண்டாள் என்பது இவ்வசனங்களில் சரியானவிதத்தில் குறிப்பிடப்படவில்லை.[66] அதேபோல, அஞ்சனம் பார்க்கும்பெண் உண்மையிலேயே மரித்தோரின் ஆவிகளுடன் தொடர்புகொண்டாளா? என்பதையும் இச்சம்பவம் அறியத்தரவில்லை. இதனால் இச்சம்பவம் கிறிஸ்தவ உலகில் அதிக சர்ச்சைக்குரிய ஒரு பகுதியாக உள்ளது. எனவே, மரித்தோரின் ஆவிகளினால் மனிதரை ஆசீர்வதிக்க முடியுமா என்பதை அறிந்துகொள்வதற்கு இச்சம்பவத்தை இவ்வத்தியாயத்தில்

---

[62] இவ்வசனங்கள், இதற்கும் முன்னும் பின்னும் உள்ள வசனங்களுடன் தொடர்பற்ற விதத்திலும், தனியான ஒரு பகுதியாகவும் உள்ளது. உண்மையில் 28:2ன் தொடர்ச்சி 29:1இலேயே உள்ளது. இதனால், இப்பகுதி ஆரம்பத்தில் 30ம் அதிகாரத்திற்குப் பின்பே இருந்திருக்க வேண்டும் என்றும், பிற்காலத்தில் இப்புத்தகத்தின் தொகுப்பாளர் இறையியல் காரணங்களுக்காக இப்பகுதியை 28ம் அதிகாரத்திற்கு இடையில் புகுத்தியுள்ளார் என்றும் வேதஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (G.Robinson, *1&2 Samuel: International Theological Commentary*, p. 141). எனினும், குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காகவே, இச்சம்பவம் இவ்விடத்தில் எழுதப்பட்டுள்ளது என்பது ஏனையவர்களின் தர்க்கமாக உள்ளது (R.W. Klein, *1 Samuel: Word Biblical Commentary Volume 10*, p. 267).

[63] சவுல் கி.மு. முதல் கி.மு வரை இஸ்ரவேலின் அரசனாக இருந்தான்

[64] பெலிஸ்தருக்குத் தெரியாமல் இரகசியமாகச் செல்வதற்காகவும், அஞ்சனம் பார்க்கும் பெண்ணுக்குத் தான் யார் என்பது தெரியாமல் இருப்பதற்காகவும் சவுல் மாறுவேஷத்தில் சென்றபோதிலும் (P.R.Ackroyd, *1Samuel: The Cambridge Bible Commentary*, 213), அக்காலத்தில் இரவு நேரத்திலேயே அஞ்சனம் பார்க்கும் செயல் நடைபெற்றதினாலேயே சவுல் அந்நேரத்தில் சென்றதற்கான காரணமாக உள்ளது (B.T.Arnold, *1 & 2 Samuel: The NIV Application Commentary*, p. 373). மேலும், இரவுநேரத்தில் மாறுவேடத்தில் சென்றது தன்னுடைய செயல் தவறானது என்பதை அறிந்தவனாக சவுல் செயற்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டுகிறது (M.J.Evans, *The Message of Samuel*, p. 154).

[65] M.F.Unger, *Biblical Demonology: A Study of Spiritual Forces at Work Today*, p. 148; J.M.Gray, *Spiritism and the Fallen Angels*, pp. 17-18.

[66] D.F.Payne, *1&11 Samuel: The Daily Study Bible*, p. 144. 1சாமுவேல் 28:9ன்படி, தன்னிடத்தில் வந்தவன் சவுல் என்பதை அஞ்சனம் பார்க்கும் பெண் அறிந்திருக்கவில்லை. ஆனால் 12ம் வசனத்தில் சாமுவேலின் ஆவியைக் கண்டவுடன், தன்னிடத்தில் வந்திருப்பவன் சவுல் என்பதை அப்பெண் அறிந்துகொள்கின்றாள்.

ஆராய்ந்து பார்ப்போம்.[67] இதற்கு வேதாகமச் சம்பவங்களை வியாக்கியானம் செய்யவேண்டிய முறையை நாம் முதலில் அறிந்திருக்கவேண்டியது அவசியம்.

## 1. வேதாகம சம்பவங்களின் விளக்கம்

வேதாகமத்திலுள்ள சம்பவங்களை, வேதாகம உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டே வியாக்கியானம் செய்யவேண்டும் என்பதை நாம் முதலில் அறிந்திருக்க வேண்டும். இந்நூலின் முதலாம் அத்தியாயத்தில் நாம் பார்த்தவிதமாக, மரித்தோரின் ஆவிகள் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வருவதில்லை என்றும், பிசாசுகளின் ஆவிகளே இவ்வுலகில் உலாவுகின்றன என்றும், இவைகளே மரித்தோரைப்போல காட்சியளிக்கின்றன என்றும் வேதாகமம் கூறுவதனால், மரித்த சாமுவேலின் ஆவி சவுலிடம் வந்திருக்கமுடியாது. உண்மையில், சாமுவேலைப்போல தோற்றமளித்த பிசாசின் ஆவியே சவுலோடு பேசியது. பிசாசு ஒளியின் தூதனுடைய வேஷம் தரித்து வருவதாக வேதாகமம் கூறுவதனால் (2கொரி.11:14), அவனால் மரித்த மனிதர்களைப் போலத் தோற்றமளிக்கவும், மரித்தவர்களின் ஆவிகள் பேசுவதுபோல பேசவும் முடியும். மேலும், நாம் ஏற்கனவே முதலாம் அத்தியாயத்தில் பார்த்தபடி, 1சாமுவேல் 28:7ல் “அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீ” என்பது மூலமொழியில் “குறிசொல்லும் பிசாசையுடைய பெண்” என்றே உள்ளது.[68] இப்பெண் பிசாசுகளுடன் தொடர்புகொள்ளக் கூடியவளாக இருந்தாளேதவிர, மரித்தோரின் ஆவிகளுடன் தொடர்புகொள்ளக்கூடிய ஆற்றலும் தகுதியும் இவளுக்கு இருக்கவில்லை.[69] இதனால், பிசாசின் ஆவியே இப்பெண்ணுடைய அஞ்சனம் பார்க்கும் செயலின் மூலம் சாமுவேலின் தோற்றத்தில் வந்துள்ளது. இதை அறியாத சவுல், உண்மையிலேயே மரித்த சாமுவேலின் ஆவி வந்துள்ளதாக எண்ணினான்.[70] மேலும், அஞ்சனம் பார்க்கும் பெண் கொண்டுவந்த ஆவியை சவுல் தன் கண்களினால் பார்க்கவில்லை. அப்பெண் கூறியவற்றை ஆதாரமாகக்கொண்டே வந்திருப்பது சாமுவேலின் ஆவி என்று அவன் எண்ணினான் (1சாமு.28:13-14).[71] அவன் ஆவி பேசியதை மாத்திரமே கேட்டான். ஆவியை நேரடியாகக் காணவில்லை.[72] அதேபோல சவுல் ஆவியோடு நேரடியாகப் பேசவுமில்லை. அஞ்சனம் பார்க்கும் பெண்ணூடாகவே பேசினான். ஏனெனில், அஞ்சனம் பார்ப்பவர்கள் கொண்டுவரும் ஆவிகளுடன் மனிதரால் நேரடியாகப் பேசமுடியாது.[73] இதனால், சவுல் பிசாசின்

---

[67] அஞ்சனம் பார்க்கும் செயல்முறை கானானியர்கள் மத்தியில் இருந்த ஒரு பழக்கமாகும் (Lewis, *The Cults of the Dead*, pp. 104-117). இஸ்ரவேல் மக்களைக் கானான் தேசத்தில் குடியமர்த்திய தேவன், இத்தீய பழக்கத்தில் ஈடுபடவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்ததோடு, இதில் ஈடுபடுபவர்களை நாட்டில் இராதபடி அகற்றும்படி கட்டளையிட்டிருந்தார். இஸ்ரவேலின் முதலாவது அரசனாயிருந்த சவுல் ஆரம்பத்தில் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவனாக அஞ்சனம் பார்ப்பவர்களையெல்லாம் நாட்டைவிட்டுத் துரத்திவிட்டிருந்தான் (1சாமு.28:3). ஆனால் இப்பொழுது அவனே அஞ்சனம் பார்க்கும் பெண்ணிடம் சென்றது அவன் தேவனுடைய கட்டளையை மீறும் செயலாகவே உள்ளது.

[68] பக்கம்

[69] M.F.Unger, *Biblical Demonology: A Study of Spiritual Forces at Work Today*, pp. 149-150.

[70] A.Heidel, *The Gilgamesh Epic and Old Testament Parallels*, p. 189.

[71] J.Baldwin, *1 and 2 Samuel: Tyndale Old Testament Commentary*, p. 159.

[72] K.L.Chafin, *1&2 Samuel: the Preacher’s Commentary*, p, 201.

[73] R.F.Youngblood, *The Expositor’s Bible Commentary Volume 3*, pp. 781-782.

ஆவியுடன் பேசும்போது சாமுவேலிடம் பேசுவதாகவே நினைத்துப் பேசினான்.[74] இதைப்பற்றி 13ம் 14ம் வசனங்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> ராஜா அவளைப் பார்த்து: நீ பயப்படாதே. நீ காண்கிறது என்ன என்று கேட்டான். அதற்கு அந்த ஸ்திரீ: தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறி வருகிறதைக் காண்கிறேன் என்று சவுலுக்குச் சொன்னாள். அவருடைய ரூபம் என்ன என்று அவளைக் கேட்டான். அதற்கு அவள்: சால்வையைப் போர்த்துக்கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன் எழும்பி வருகிறான் என்றாள். அதினாலே சவுல் அவன் சாமுவேல் என்று அறிந்துகொண்டு, தரைமட்டும் முகங்குனிந்து வணங்கினான் (1சாமு.28:13-14).

"நீ காண்கிறது என்ன?" என்னும் கேள்விக்கு, "தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறி வருகிறார்கள்" என்றும், "அவருடைய ரூபம் என்ன?" என்னும் கேள்விக்கு, "சால்வையைப் போர்த்துக்கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன்" என்றும் கொடுக்கப்பட்ட பதிலை அடிப்படையாகக் கொண்டே சாமுவேலின் ஆவி வந்துள்ளது என்று எண்ணி, அதனோடு சவுல் பேசினான். இதனால், சவுலோடு சென்ற இருவருக்கும் (1சாமு.28:8) அவன் சாமுவேலோடு பேசுவதாகவே தென்பட்டது. இதனாலேயே 1சாமுவேல் 28ம் அதிகாரத்தில் ஆவி பேசும்போது சாமுவேல் பேசுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[75]

1சாமுவேல் 28ம் அதிகாரத்தை வாசிக்கும்போது, மரித்துப்போன சாமுவேலே சவுலோடு பேசியதாக நமக்குத் தென்பட்டாலும், மரித்தோரின் ஆவிகள் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வருவதில்லை என்று வேதாகமம் கூறுவதனால், மரித்த சாமுவேலின் ஆவியினால் சவுலிடம் பேசியிருக்கமுடியாது. பழைய ஏற்பாட்டின் சரித்திரப் புத்தகங்கள், குறிப்பாக அரசர்களின் வாழ்க்கை வரலாற்றை அறியத்தரும் சாமுவேல், ராஜாக்கள், நாளாகமம் என்னும் புத்தகங்கள், ஏற்கனவே எழுதப்பட்டிருந்த சரித்திரக் குறிப்புகளையும் நூல்களையும் ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டவைகளாகும். இதனால்தான், நாளாகமப் புத்தகத்தை எழுதியவர், தான் உபயோகித்த சரித்திரப் புத்தகங்களின் விபரங்களைப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். உதாரணத்திற்குத் தாவீதின் கால சரித்திரத்தை எழுதிமுடிக்கும்போது, தாவீதைப் பற்றிய முழுமையான சரித்திரம் எப்புத்தகங்களில் உள்ளன என்பதை 1நாளாகமம் 29:29-30ல் அறியத்தந்துள்ளார். இதைப்போல, ஏனைய அரசர்களின் வாழ்க்கை வரலாறுகள்

---

[74] M.J.Evans, *The Message of Samuel*, p. 154.

[75] சில வேத ஆராய்ச்சியாளர்கள் இச்சம்பவத்தை, அஞ்சனம் பார்க்கும் பெண்ணுடைய அனுபவமாக மட்டுமே கருதுகின்றனர். அதாவது, அஞ்சனம் பார்க்கும் பெண்ணுக்கு ஏற்பட்ட உளவியல் தாக்கம் காரணமாக, சாமுவேல் தோன்றி தன்னோடு பேசுவதாக உளவியல் ரீதியாக அவள் உணர்ந்ததாக இவர்கள் கூறுகின்றனர் (P.Schaff, ed., *The Books of Samuel: Lange's Commentary*, p. 336). ஆனால், அஞ்சனம் பார்க்கும் பெண் மட்டும் அல்ல சவுலும் சாமுவேலோடு பேசுவதனால், அப் பெண்ணுக்கு ஏற்பட்ட உளவியல் ரீதியான அனுபவமாக இதனைக் கருதமுடியாது. மேலும், மரித்தவரின் ஆவியைக் கண்டபோது அப்பெண் நடந்துகொண்ட முறையும், இது உளவியல் ரீதியான அனுபவம் அல்ல என்பதற்கான ஆதாரமாக உள்ளது. இதைப்போலவே, அஞ்சனம் பார்க்கும் பெண் உண்மையில் சாமுவேலின் ஆவியைக் காணவில்லை என்றும், அவள் சவுலை ஏமாற்றும் நோக்கத்துடன் சாமுவேலின் ஆவி வந்துள்ளதாகக் கூறினாள் என்றும் கூறுபவர்களின் தர்க்கங்களும் (J.Orr, "Witch of Endor" in *The International Standard Bible Encyclopaedia Volume 2*, p. 944) ஏற்றுக்கொள்ளக்கூடியவைகளாக இல்லை.

எங்கிருந்து எடுக்கப்பட்டன என்பதை அறியத்தரும் பல குறிப்புகள் நாளாகமப் புத்தகத்தில் உள்ளன (1நாளா.9:1, 29:29, 2நாளா. 9:29, 12:15, 13:22, 16:11, 20:34, 32:32, 33:18-19, 35:27). சாமுவேலின் புத்தகத்தில் இத்தகைய ஒரு குறிப்பு மாத்திரமே உள்ளபோதிலும் (2சாமு.1:18), இப்புத்தகத்தை எழுதியவர் ஏற்கனவே எழுதப்பட்ட சரித்திரக் குறிப்புகளை உபயோகித்துள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை.[76]

தாவீதினுடைய மகன் சாலொமோனுடைய காலத்திற்கும் பின்பே சாமுவேலின் புத்தகம் எழுதப்பட்டுள்ளமையால்,[77] ஏறக்குறைய 100 வருஷத்திற்கும் முற்பட்ட சரித்திரத்தை ஏற்கனவே எழுதப்பட்ட சரித்திரப் புத்தகங்களை ஆதாரமாகக் கொண்டே எழுதியிருக்க முடியும். வேதாகமம் தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட புத்தகம் என்பது உண்மை என்றாலும், சில சந்தர்ப்பங்களில் (குறிப்பாக சரித்திரப் புத்தகங்களில்) ஆவியின் ஏவுதல் ஏற்கனவே எழுதப்பட்ட புத்தகங்களை உபயோகிப்பதையும் உள்ளடக்கியுள்ளது.[78] புதிய ஏற்பாட்டில் லூக்காவின் சுவிசேஷமும் இவ்வாறே எழுதப்பட்டுள்ளது (லூக்.1:1-4). இதனால் சவுலும், அவனோடு அஞ்சனம் பார்க்கும் பெண்ணிடம் சென்ற இருவரும் மாத்திரம் அறிந்திருந்த விஷயம், அவர்களுடைய அனுபவத்தின்படி சாமுவேலின் ஆவி பேசியதாக எழுதப்பட்டிருந்த சரித்திரக் குறிப்பை ஆதாரமாகக்கொண்டே 1சாமுவேல் 28ம் அதிகாரம் எழுதப்பட்டுள்ளது.[79] இதனாலேயே சாமுவேலின் ஆவி சவுலுடன் பேசியதாக இவ்வதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கானானிய மார்க்கத்தின் செல்வாக்கு காரணமாக, அஞ்சனம் பார்ப்பவர்களினால் மரித்தோரின் ஆவிகளைக் கொண்டு வரமுடியும் என்று அக்காலத்தில் இஸ்ரவேல் மக்களும் நம்பியதினால், அவர்களுடைய சரித்திரக் குறிப்புகளில் இச்சம்பவம் சாமுவேலின் ஆவி வந்ததாகவே எழுதப்பட்டுள்ளது.[80] இத்தகைய குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டே 1சாமுவேல் 28ம் அதிகாரம் எழுதப்பட்டுள்ளது. இதனால், வேதாகமத்தின் உபதேசப்பகுதிகளை

---

76 G.L.Archer, *A Survey of Old Testament Introduction*, p. 314.

77 இஸ்ரவேல் ராட்சியம் சாமுவேலின் ஆட்சிக்காலத்தின் பின்பு யூதா இஸ்ரவேல் என்று இரண்டாகப் பிரிந்தது. சாமுவேல் புத்தகத்தில் இத்தகைய ராட்சியப் பிரிவுகளைப்பற்றிய குறிப்புகள் இருப்பதனால் (1சாமு.11:8, 17:52, 18:16, 2சாமு.5:5, 11:11, 12:8, 19:42-43), ராட்சியம் பிரிவடைந்த பின்னே இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கவேண்டும். தீர்க்கதரிசியாகிய சாமுவேலே இப்புத்தகத்தை எழுதியதாக யூதர்கள் நம்பினாலும், 1சாமுவேல் 25:1லேயே இவர் மரித்துவிடுவதனால் இவரால் முழுப் புத்தகத்தையும் எழுதியிருக்கமுடியாது. “சாமுவேலின் பிரபந்தம்” என்னும் நூலில் தாவீதின் வாழ்க்கை வரலாற்றை சாமுவேல் எழுதியுள்ளபோதிலும் (1நாளா.29:29), இப்புத்தகத்தையும், தாவீதைப்பற்றி எழுதப்பட்டுள்ள ஏனைய நூல்களையும் உபயோகித்தே வேதாகமத்திலுள்ள சாமுவேலின் புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

78 வேதாகமத்தின் சில பகுதிகள் (அதாவது, தேவனுடைய கட்டளைகளும் அறிவுறுத்தல்களும் தீர்க்கதரிசனங்களும்) நேரடியாகத் தேவனால் கொடுக்கப்பட்டவை. ஏனையவை மனிதருடைய அனுபவங்களாகவும் (உதாரணத்திற்கு சங்கீதங்கள்) ஆலோசனைகளாகவும் (உதாரணத்திற்கு நிருபங்கள்) உள்ளன. சரித்திரப் பகுதிகள் ஏற்கனவே எழுதப்பட்டிருந்தவைகளை உபயோகித்து எழுதப்பட்டவைகள். எனினும், இவ்வாறு வித்தியாசமான முறைகளில் வேதாகமப் புத்தகங்கள் எழுதப்படும்போது, அவற்றை எழுதியவர்கள் தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டவர்களாக இருந்தனர். இதனால் முழு வேதாகமமும் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்டவைகளாக உள்ளன.

79 P.R.Ackroyd, *1Samuel: The Cambridge Commentary*, p. 214.

80 இதைப்போன்ற இன்னுமொரு உதாரணத்திற்கு நியாயதிபதிகள் 4:14 பார்க்கவும். இங்கு வேதாகம உபதேசத்தையே முரண்படுத்தும் விதத்தில், புறஜாதிப் பெண்ணுடனான திருமணம் தேவசித்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அக்கால இஸ்ரவேல் மக்கள் மத்தியில் இருந்த ஒரு நம்பிக்கையே தவிர, நியாயதிபதிகள் 4:14ல் குறிப்பிடப்பட்டுள்ளவிதமாக தேவனுடைய சித்தத்தின்படி நடைபெற்ற காரியம் அல்ல. இதனால் மூலமொழியில் இவ்வசனம் அடைப்புக்குறிக்குள் உள்ளது. இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு என்னுடைய ***விபரீதமான வீரன்*** என்னும் நூலைப்பார்க்கவும்.

அடிப்படையாகக் கொண்டே சரித்திரப்பகுதிகளை வியாக்கியானம் செய்யவேண்டும் என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

## 2. வேதாகம சத்தியத்தின் விளக்கம்

தற்காலத்தில் சில வேத ஆராய்ச்சியாளர்கள், தேவன் இந்த ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம், மரித்த சாமுவேலின் ஆவியை சவுலோடு பேசுவதற்காகக் கொண்டுவந்தார் என்று எண்ணுகின்றனர்.[81] எனினும், இது யூதமதப் போதகர்களின் விளக்கமாகவே உள்ளது.[82] இது வேதாகமம் போதிக்கும் சத்தியம் அல்ல. மரித்தோரிடம் ஆலோசனை கேட்கச் சென்ற சவுலுக்குத் தேவன் கோபத்தில் கொடுத்த பதிலாக இது இருப்பதாகவும் சிலர் கூறுகின்றனர்.[83] ஆனால், தேவன் சாமுவேலின் ஆவியைக் கொண்டுவந்தார் என்று 1சாமுவேல் 28ம் அதிகாரம் கூறவில்லை. அஞ்சனம் பார்க்கும் பெண்ணுடைய செயலின்மூலமே சாமுவேலைப்போல தோற்றமளித்த ஒரு ஆவி வந்தது (1சாமு.28:11-12).[84] மேலும், தேவன் சாமுவேலின் ஆவியைக் கொண்டுவந்தார் என்று கூறுவது, தேவனுடைய தன்மையையும் வேதாகம உபதேசத்தையும் முரண்படுத்தும் விளக்கமாகவே உள்ளது. தேவவழிநடத்துதலைப் பெறுவதற்காக மரித்தவர்களிடம் விசாரிக்கும் முறையைத் தேவன் கடுமையாகக் கண்டித்துள்ளதோடு, இத்தகைய பழக்கத்தை முழுமையாகத் தடைசெய்துள்ளார். “அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடவேண்டாம்” (லேவி.19:31) என்றும், “செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவர்கள் உங்களிடத்தில் இருக்கவேண்டாம்” (உபா.18:11) என்றும் கட்டளையிட்ட தேவன், இத்தகைய செயலுக்குத் தாம் எதிர்த்து நிற்பதாகத் தெரிவித்துள்ளதோடு (லேவி.20:6), இதில் ஈடுபடுகிறவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்படவேண்டும் என்றும் அறிவித்துள்ளார் (யாத்.22:18). உண்மையில், அஞ்சனம் பார்ப்பதும் மரித்தவர்களிடத்தில் குறிகேட்பதும் தேவன் தடைசெய்துள்ள பாவங்களாகவே வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன (2ராஜா.21:6, 2நாளா.33:6). எனவே, தேவன் தாம் வெறுக்கும் பாவமான ஒரு செயலின் மூலம் சாமுவேலின் ஆவியைச் சவுலோடு பேசவைத்தார் என்று தர்க்கிப்பது, தேவனே தாம் வெறுக்கும் பாவத்தைச் செய்துள்ளதாகக் கூறுவதாகவே உள்ளது. தாம் தடை செய்த காரியத்தைத் தாமே செய்யும் அளவுக்குத் தேவன் முரண்பாடானவர் அல்ல என்பதை நாம் மறக்கலாகாது. எனினும், தேவன் சகலத்தையும் தம்முடைய கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதனால், சவுலுக்கு என்ன செய்தி அச்சமயம் கொடுக்கப்படவேண்டுமோ, அதை மாத்திரம்

---

81 E.H.Merrill, *1Samuel: The Bible Knowledge Commentary Old Testament*, p. 454; G.J.Keddie, *Dawn of a Kingdom: The Message of 1Samuel*, p. 272; J.J.Davis & J.C.Whitcomb, *Israel From Conquest to Exile*, p. 256; ஆதிசபைப்பிதாக்களில் ஒரிகன் என்பவர், மத்தியஸ்தராக இருக்கும் இயேசுகிறிஸ்துவின் செயலாக இச்சம்பவத்தை விளக்கியுள்ளார் (P.Cox, “Origen and the Witch of Endor: Toward an Iconoclastic Typology” in *Anglican Theological Review*. 61, 2 (1984), pp. 139-144)

82 J.C.Laney, *1&2 Samuel: Everyman’s Bible Commentary*, p. 79.

83 G.H.Pember, *Earth’s Earliest Ages*, p. 168.

84 “அப்பொழுது அந்த ஸ்திரீ: உமக்கு நான் யாரை எழும்பிவரப்பண்ணவேண்டும் என்றதற்கு, அவன்: சாமுவேலை எழும்பிவரப்பண்ணவேண்டும் என்றான். அந்த ஸ்திரீ சாமுவேலைக் கண்டமாத்திரத்தில் மகாசத்தமாய்க் கூப்பிட்டு, சவுலை நோக்கி: ஏன் என்னை மோசம்போக்கினீர்? நீர் தான் சவுலாச்சுதே என்றாள்” என்று 1சாமுவேல் 28:11-12ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேசுவதற்குப் பிசாசுக்கு அனுமதி கொடுத்தார். தேவனுடைய அனுமதிக்கும் அப்பால் பிசாசினால் எதுவும் செய்ய முடியாது என்பதை யோபுவின் சரித்திரம் அறியத்தருகின்றது (யோபு.1:12). உண்மையில், இஸ்ரவேலைச் சபிக்கச் சென்ற பிலேயாமைத் தேவன் அவனுடைய விருப்பத்தின்படி பேசவிடாதிருந்ததைப் போலவே இங்கும் செய்துள்ளார்.

1சாமுவேல் 28:6ல், "சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்போது கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலாவது ஊரீமினாலாவது தீர்க்கதரிசிகளினாலாவது மறுஉத்தரவு அருளவில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[85] உண்மையில், "சொப்பனங்கள்" "ஊரீம்" "தீர்க்கதரிசிகள்" என்பனவே தேவன் அக்காலத்தில் மனிதர்களிடம் பேசுவதற்காக உபயோகித்து வந்த ஊடகங்களாகும்.[86] இவற்றினூடாகச் சவுலோடு பேச மறுத்த தேவன், அஞ்சனம் பார்க்கிற ஒரு பெண்ணுடைய செயலின் மூலம் மரித்துப்போன சாமுவேலை எழும்பிவரச் செய்து அவனோடு பேசினார் என்று கூறுவது அர்த்தமற்றது. உண்மையிலேயே தேவன் சவுலோடு பேச விரும்பியிருந்தால், அவன் அவரிடத்தில் விசாரித்தபோது அவனுக்கு பதிலளித்திருப்பார். சவுல் தேவனுடைய வார்த்தையைத் தேடியபோது மவுனமாயிருந்த தேவன், அவர் தடைசெய்துள்ள காரியத்தைச் செய்தபோது அதன் மூலம் அவனோடு பேசினார் என்று கூறுவது அர்த்தமற்றது. மேலும், ஆரம்பத்தில் தேவனுடைய கட்டளையின்படி அஞ்சனம் பார்க்கிற சூனியக்காரர்களைக் கொன்றுபோட்ட சவுல் (1சாமு.28:9), இப்பொழுது அஞ்சனம் பார்க்கும் ஒரு பெண்ணிடம் சென்றது, தான் தேவனுடைய கட்டளைக்கு விரோதமான ஒரு காரியத்தைச் செய்கின்றேன் என்பதை அறிந்து அவன் செய்த ஒரு பாவமாகவே உள்ளது.[87] எனவே, இத்தகைய காரியத்தில் தேவனுடைய செயல் இருப்பதாகக் கூறமுடியாது.

சாமுவேலின் ஆவியைத் தேவன் கொண்டுவந்தார் என்று கருதுபவர்களில் சிலர், இது அஞ்சனம் பார்க்கும் பெண்ணுடைய செயலின் மூலமாக வரவில்லை என்றும்

---

85 தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல், தன்னுடைய விருப்பத்தின்படியே செயல்பட்டு வந்த சவுலைத் தேவன் கடைசியில் கைவிட்டுவிட்டார். உண்மையில் நீதிமொழிகள் 1:22-32ன்படியே சவுலின் வாழ்வு இருந்துள்ளது (W.W.Wiersbe, *Be Successful: An Old testament Study – 1Samuel*, p. 156)

86 தேவன் சொப்பனங்களின் மூலம் பேசும்போது மனிதர்களுக்குக் கனவில் தரிசனங்களைக் காண்பிப்பது வழக்கம். மக்கள் நெருக்கடியான சூழ்நிலைகளில் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்காக ஆசாரியர்களினால் உபயோகிக்கப்பட்ட கற்களே ஊரீம் தும்மீம் என்று அழைக்கப்பட்டன (யாத்.28:30, லேவி.8:8, எண்.27:21, உபா.33:8, 1சாமு.28:6, எஸ்.2:63, நெகே.7:65). யூதர்கள் பாபிலோனியச் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தபின்னர் இவற்றின் உபயோகம் இல்லாமற் போய் விட்டது. தீர்க்கதரிசிகள் தேவனுடைய வாயாகச் செயற்பட்டு அவர் அருளும் வார்த்தைகளை மக்களுக்கு அறிவித்து வந்தனர்.

87 R.W.Klein, *1 Samuel: Word Biblical Commentary Volume 10*, p.270. இதைப்போலவே, அஞ்சனம் பார்க்கும் பெண் ஆரம்பத்தில் சவுலின் கோரிக்கைக்கு இணங்காதபோது, அவளுக்கு எந்தத் தீங்கும் நேராது என்று சவுல் கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு அவர்மேல் ஆணையிட்டதும் (1சாமு.28:10), தேவனுக்கு எதிரான ஒரு செயலாகவே உள்ளது. தேவனுடைய கட்டளைக்கு எதிரான ஒரு காரியத்தைச் செய்யும் சவுல் அதற்காகக் கர்த்தருடைய நாமத்தை உபயோகிப்பது, அவரை நிந்திப்பதாகவே உள்ளது. இதனால், தேவன் அவனுக்கு சார்பாகச் செயற்படாமல், எதிராகவே இருந்தார். மேலும், ஆரம்பத்தில் சாமுவேலின் அறிவுறுத்தலின்படி, நாட்டிலிருக்கும் அஞ்சனம் பார்க்கும் மனிதர்களையெல்லாம் அழித்துப்போட்ட சவுல், இப்பொழுது அஞ்சனத்தின் மூலம் சாமுவேலின் ஆவியைக் கொண்டுவரும்படி கேட்டது சாமுவேலையும் நிந்திக்கும் செயலாக உள்ளது (R.D.Bergen, *1,2 Samuel: The New American Commentary*, p. 266).

வாதிடுகின்றனர். அதாவது, அஞ்சனம் பார்க்கும் பெண் தன்னுடைய செயலை முடிப்பதற்கும் முன்பே தேவன் சாமுவேலின் ஆவியைக் கொண்டுவந்துவிட்டார் என்று இவர்கள் கருதுகின்றனர்.[88] இதனால்தான், சாமுவேலின் ஆவியைக் கண்டபோது அப்பெண் அதிர்ச்சியடைந்தாள் என்று இவர்கள் கூறுகின்றனர்.[89] பிசாசின் ஆவியையுடைய பெண், அவ்வாவியின் மூலம் செய்பவற்றைக் கண்டு அதிர்ச்சியடையவேண்டியதில்லை என்பது உண்மை என்றாலும், இவர்கள் கூறுவதுபோல அப்பெண், தான் கொண்டுவந்த சாமுவேலைப்போல தோற்றமளித்த ஆவியைக் கண்டு அதிர்ச்சியடையவில்லை. நாம் ஏற்கனவே பார்த்தபடி நம்முடைய வேதாகமங்களில் இப்பகுதி தெளிவற்றதாகவே உள்ளது.[90] ஆனால், பழைய ஏற்பாட்டின் சில கிரேக்கமொழிப் பிரதிகளில் 12ம் வசனத்தில் "சாமுவேலைக் கண்டமாத்திரத்தில்" என்பது, "சவுலைக் கண்ட மாத்திரத்தில்" என்று உள்ளது.[91] உண்மையில், இதுவே மூலமொழியின் சரியான அர்த்தமாகவும் தெளிவற்ற இவ்வசனத்தைத் தெளிவுபடுத்தும் மொழிபெயர்ப்பாகவும் உள்ளது.[92] இல்லையென்றால், சாமுவேலின் ஆவியைப் பார்த்தவுடன் அப்பெண் தன்னிடம் வந்த மனிதன் சவுல் என்பதை அறிந்துகொண்டாள் என்று 12ம் வசனம் கூறுவதாகவே நாம் கருதவேண்டும். எனினும், இது எவ்வித அர்த்தமுமற்ற குழப்பமான வசனமாகவே இருக்கும். ஏனெனில், சாமுவேலின் ஆவியைப்பார்த்து சவுலை அடையாளம் காண்பது நடைமுறையில் சாத்தியப்படாது. ஆனால், "சவுல் வேஷம் மாறி வேறு வஸ்திரம் தரித்தவனாய்" (1சாமு.28:8), அதாவது ராஜ வஸ்திரத்தை அணியாமல் வேறு ஆடைகளுடன் அஞ்சனம் பார்க்கும் பெண்ணிடம் சென்றதினால், ஆரம்பத்தில் அவன் யார் என்பதை அப்பெண்ணால் அறிந்துகொள்ள முடியவில்லை.[93] ஆனால், அவள் அஞ்சனம் பார்க்கும் செயலை ஆரம்பித்தபோது, தனக்குள் இருக்கும் பிசாசுகளின் மூலம் தன்னிடத்தில் வந்திருப்பது சவுல் என்பதை அறிந்துகொண்டதோடு,[94] அவன் தன்னைக் கொல்லுவதற்காகவே வந்திருக்கின்றான் என்று எண்ணி அதிர்ச்சியடைந்தாள். இதனால்தான், மாறுவேஷத்தில் அஞ்சனம்பார்க்க வந்த சவுலிடம் அப்பெண், "சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும், தேசத்தில் இராதபடிக்கு நிர்மூலமாக்கின செய்தியை நீர் அறிவீரே. என்னைக் கொன்றுபோடும்படி நீர் என் பிராணனுக்குக் கண்ணி வைக்கிறது என்ன?" என்று கேட்டவள் (1சாமு.28:9), தன்னிடத்தில் வந்தவன் சவுல் என்பதை அறிந்தபோது அதிர்ச்சியடைந்தாள்

[88] D.T.Tsumura, *1Samuel: The New International Commentary on the Old Testament*, pp. 623-624; C.J.Barber, *The Books of Samuel Volume One*, p. 297.
[89] W.A.M. Beuken, "1Samuel 28: The Prophet as Hammer of Witches" in JSOT 6 (1978), p. 8; J.C.Laney, *1&2 Samuel: Everyman's Bible Commentary*, pp. 78-79.
[90] பக்.
[91] உண்மையில், வேதாகம மொழிபெயர்ப்புகள் திருத்தப்பட்ட மூலப்பிரதியை உபயோகிப்பதனால் இவ்வதிகாரத்தில் இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன (P.K.McCarter, *1Samuel: The Anchor Bible Commentary*, pp. 421).
[92] G.B.Caird, *1&2 Samuel: The Interpreters Bible Volume 2*, p. 1028; P.K.McCarter, *1Samuel: The Anchor Bible Commentary*, pp. 421, 423.
[93] ஆரம்பத்தில் அப்பெண் சவுலினுடைய ஒற்றர்களே தன்னிடம் வந்திருப்பதாக எண்ணியிருக்கவேண்டும் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (M.J.Evans, *1 and 2 Samuel: New International Biblical Commentary*, p. 124).
[94] R.F.Youngblood, *1,2 Samuel: The Expositor's Bible Commentary Volume 3*, p. 781; M.J.Evans, *1 and 2 Samuel: New International Biblical Commentary*, p. 125.

(1சாமு.28:12). எனவே, சாமுவேலின் ஆவியைத் தேவன் கொண்டுவரவுமில்லை. அதைக்கண்டு அப்பெண் அதிர்ச்சியடையவுமில்லை.

சவுலினுடைய மரணத்திற்கான முக்கியமான காரணங்களில் ஒன்றாக அவன் அஞ்சனம் பார்த்த செயல் இருப்பதை 1நாளாகமம் 10:13-14 அறியத்தருகின்றது. "அவன் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமலும், கர்த்தரைத் தேடாமலும், அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திற்குச் சென்றதினால், கர்த்தர் அவனைக் கொன்றார்" என்று 1நாளாகமம் 10:13-14ல் குறிப்பிடப்பட்டுள்ளது.[95] நியாயப்பிரமாணத்தின்படி, அஞ்சனம் பார்ப்பது மரண தண்டனைக்குரிய பாவமாக உள்ளது (லேவி.20:6). இதனால், அஞ்சனம் பார்க்கச் சென்று 24 மணித்தியாலங்களுக்குள் சவுல் மரணமடைந்தான். அஞ்சனம் பார்க்கிறவர்களையெல்லாம் நாட்டைவிட்டு அகற்றும் பணியைச் செய்யவேண்டியவனாயிருந்த சவுலே அஞ்சனம் பார்க்கச் சென்றதினால் தேவன் அவனை இவ்விதமாகத் தண்டித்துள்ளார்.[96] எனவே, அஞ்சனம் பார்க்கும் பெண்ணின் செயலின் ஊடாகத் தேவன் சாமுவேலின் ஆவியைக் கொண்டு வந்திருந்தால், சவுல் அஞ்சனம் பார்க்கச் சென்றதற்காகத் தேவன் அவனைக் கொல்வது அர்த்தமற்ற செயலாக இருப்பது மட்டுமல்ல, இது தேவன் முரண்பாடுடையவர் என்பதற்கான ஆதாரமாகவும் இருக்கும். மக்கள் அஞ்சனம் பார்ப்பதையும் மரித்தவர்களின் ஆவிகளுடன் தொடர்புகொள்ள முற்படுவதையும் தேவன் பாவமான செயல்களாகக் கருதியதினாலேயே, இத்தகைய காரியத்தைச் செய்த சவுலை அவர் தண்டித்துள்ளார். எனவே, அஞ்சனம் பார்க்கும் செயலுக்கு உதவும் விதத்தில் தேவன் மரித்துப்போன சாமுவேலின் ஆவியைக் கொண்டுவந்தார் என்று கூறமுடியாது.

---

[95] 1நாளாகமம் 10:13ல் சவுல் கர்த்தரைத் தேடவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், 1சாமுவேல் புத்தகத்தில் இதை முரண்படுத்தும் விதத்தில் அவன் கர்த்தரைத் தேடியதைப்பற்றி பல தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது (1சாமு.14:37, 15:31, 28:6). சாமுவேலின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, சவுல் ஒருசில தடவைகள் தேவனைத் தேடியபோதிலும், அவன் நெருக்கடியான சூழ்நிலைகளிலேயே தேவனைத் தேடுகிறவனாக இருந்துள்ளான். மேலும், சாமுவேலின் புத்தகத்திலும், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதவனாகவும், தேவனுடைய வார்த்தையை முரண்படுத்துகிற விதத்தில் செயற் படுகிறவனாகவும் சவுல் பல சந்தர்ப்பங்களில் இருந்துள்ளது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (1சாமு.13:1-23, 15:1-35, 28:8-25). நாளாகமப் புத்தகத்தை எழுதியவர், சவுலினுடைய முழு வாழ்வையும் கருத்திற் கொண்டவராக, அவன் தேவனை நம்பி வாழ்கின்ற ஒரு மனிதனாக இருக்கவில்லை என்பதை அறியத்தரும் விதத்தில், அவன் தேவனைத் தேடவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் (R.Braun, *1Chronicles: Word Biblical Commentary Volume 14*, p. 152). மேலும், தேவனைத் தேடுவதற்கு சாமுவேலின் புத்தகத்தில் உள்ள வார்த்தையை நாளாகமப் புத்தகத்தை எழுதியவர் உபயோகிக்கவில்லை. சவுல் தேவனைத் தேடியுள்ள போதிலும் இதை உண்மையான தேடுதலாகக் கருதமுடியாது என்பதனால், அதாவது அவன் ஏனைய பக்தர்களைப்போல தேவனை எப்பொழுதும் முழுமையாக நம்பியவனாகவும், முழு இருதயத்தோடும் தேடுகிறவனாக இராதமையால், நாளாகமப் புத்தகத்தை எழுதியவர் சவுலின் செயல்களை உண்மையாகத் தேவனைத் தேடும் செயல்களாகக் கருதவில்லை. இதனாலேயே அவன் தேவனைத் தேடவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் (J.W.Haley, *An Examination of the Alleged Discrepancies of the Bible*, pp. 359-360). தேவனைத் தேடிய சவுலின் செயல்கள் ஏனைய பக்தர்களுடையதைப்போல இராததினால், அவன் மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகளில் இருந்தபோதிலும் தேவன் அவனுக்கு எவ்வித பதிலையும் கொடுக்கவில்லை (R.F.Youngblood, *1,2 Samuel: The Expositor's Bible Commentary Volume 3*, pp. 667, 779). நெருக்கடியான சூழ்நிலைகளில் மாத்திரம் தேவனைத் தேடுகிறவர்களாகவும், ஏனைய நேரங்களில் தங்களுடைய மனவிருப்பங்களின்படி வாழ்கிறவர்களாகவும் இருப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை எரேமியா 2:27 அறியத்தருகிறது. இப்படிப்பட்ட நிலையிலேயே சவுலும் இருந்தான் (J.G.McConvville, *1&11 Chronicles: The Daily Study Bible*, p. 18).

[96] S.Zalewski, "The Purpose of the Story of the Death of Saul in 1Chronicles X" in VT 39 (1989), pp. 449-467; J.A.Thompson, *1,2 Chronicles: The New American Commentary*, p. 112.

அஞ்சனம் பார்க்கும் பெண் கொண்டுவந்த ஆவி சாமுவேலைப்போல பேசியதினாலும், அந்த ஆவி கூறியவைகள் அடுத்த நாள் சவுலின் வாழ்வில் நடைபெற்றதினாலும் சாமுவேலின் ஆவியே வந்திருக்கவேண்டும் என்று சிலர் கருதுகின்றனர்.[97] ஆனால், ஒளியின் தூதனைப்போல வேஷமிட்டு மக்களை ஏமாற்றும் பிசாசினால் சாமுவேலைப் போல தோற்றமளித்து அவனைப்போல பேசமுடியாது என்று இவர்கள் எண்ணுவது அர்த்தமற்றது. பிசாசின் ஆவிகள் மனிதரை வஞ்சிப்பவைகளாய் இருப்பதனால், மரித்த சாமுவேலின் ஆவியே வந்துள்ளது என்னும் எண்ணம் சவுலுக்கு ஏற்படும்விதத்தில் பிசாசின் ஆவி பேசியது.[98] மனிதர்கள் உயிருடன் இருக்கும்போது அவர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதைப் பிசாசுகள் அறிந்திருப்பதனால், அவர்களுடைய மரணத்தின் பின்னர் அவர்களைப்போல பிசாசுகளினால் நடிக்கக்கூடியதாயுள்ளது.[99] இதனாலேயே அஞ்சனம்பார்க்கும் பெண் கொண்டுவந்த ஆவி சாமுவேலைப்போல தோற்றமளித்தது. மேலும், அஞ்சனம் பார்க்கிறவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்படும் என்பதை வேதாகமத்தின் மூலமும் (லேவி.20:6), சவுலுக்கு என்ன நடக்கும் என்பதை சாமுவேல் உயிரோடிருந்தபோது முன்னறிவித்த தீர்க்கதரிசனத்தின் மூலமும் அறிந்திருந்த பிசாசு, தேவகட்டளையைமீறி அஞ்சனம் பார்க்கும் சவுலுக்கு அத்தண்டனை கிடைக்கும் என்பதை அறிவித்தது. உண்மையில், சாமுவேல் உயிரோடிருந்தபோது கூறியவற்றையே இச்சம்பவத்தில் அஞ்சனம் பார்க்கும் பெண் கொண்டுவந்த ஆவி சவுலுடன் பேசியுள்ளது.[100] எனவே, “அஞ்சனம் பார்க்கும் பெண் கொண்டுவந்த ஆவி, மறுநாளில் சவுல் மரணமடைவதை முன்னறிவித்ததினால், சாமுவேலின் ஆவியே வந்திருக்கவேண்டும்”[101] என்னும் தர்க்கம் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

அஞ்சனம் பார்க்கும் பெண் கொண்டுவந்த ஆவி சாமுவேலினுடையது அல்ல என்பதை உறுதிப்படுத்தும் சில குறிப்புகளும் 1சாமுவேல் 28ம் அதிகாரத்தில் உள்ளன. அஞ்சனம் பார்க்கும் பெண், “தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறிவருவதைக்” (1சாமு.28:13) காண்பதாகவே கூறினாள். மரித்தோரின் ஆவிகளை வேதாகமம் தேவர்கள் என்று அழைப்பதில்லை. அஞ்சனம் பார்க்கும் செயல் பிசாசின் ஆவிகளினால் செய்யப்படுவதினால், அப்பெண், தனக்கு உதவிடும் பிசாசுகளைத் தேவர்கள் என்று குறிப்பிட்டுள்ளாள்.[102] மேலும், அப்பெண் குறிப்பிட்டுள்ள விதமாக மரித்தோரின் ஆவிகள் பூமிக்குள் இருப்பதில்லை. அவை தேவனிடம் செல்வதாகவே வேதாகமம் கூறுகிறது (பிர.12:7, 3:21). எனவே, தேவனிடம் சென்ற சாமுவேலின்

---

97 W.Macdonald, *Believer’s Bible Commentary,* p. 319; J.C.Laney, *1&2 Samuel: Everyman’s Bible Commentary,* p. 79.

98 உண்மையில், சாமுவேல் உயிரோடிருந்த போது சவுலுக்கு அறிவித்தவற்றையே பிசாசின் ஆவியும் கூறியது (1சாமு.15:22-29 உடன் 1சாமு.28:17ஐ ஒப்பிடவும்).

99 G.H.Pember, *Earth’s Eariest Ages*, p. 168.
100 R.W.Klein, *1Samuel: Word Biblical Commentary Volume 10*, p. 270.
101 W.MacDonald, *Believer’s Bible Commentary*, p. 319.
102 மூலமொழியில், தேவனைக் குறிப்பிடும் “எலோஹிம்” (*elohim*) என்னும் எபிரேயச் சொல்லே உள்ளது.

ஆவியை அஞ்சனம் பார்க்கும் பெண் "பூமிக்குள் இருந்து வருவதாகக்" கண்டிருக்க முடியாது.[103] மேலும், அஞ்சனம் பாக்கும் பெண் கண்ட உருவம், சாமுவேல் இவ்வுலகத்தில் வாழ்ந்தபோது இருந்த தோற்றத்திலேயே இருந்தது. "சால்வையைப் போர்த்திக் கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன் எழும்பி வருகின்றான்" என்றே அப்பெண் கூறினாள் (1சாமு.28:14). எனவே, இது பரலோகத்திலிருந்து வந்த சாமுவேலின் ஆவி அல்ல. சாமுவேல் பூமியில் வாழ்ந்தபோது எத்தகைய தோற்றத்தில் இருந்தாரோ, அத்தகைய தோற்றத்தில் வந்த பிசாசின் ஆவியாகவே உள்ளது.

### 3. மறுரூபமலையில் மரித்தோரின் மகிமை

மரித்தோரின் ஆவிகளினால் மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வரமுடியும் என்று கூறுபவர்கள் சுட்டிக்காட்டும் இன்னுமொரு வேதப்பகுதி, மறுரூபமலையில் மோசேயும் எலியாவும் இயேசுகிறிஸ்துவுடன் காட்சியளித்த சம்பவமாகும் (மத்.17:1-9, மாற்.9:2-8, லூக்.9:28-36).[104] ஆனால் இது மரித்தோரின் ஆவிகள் பூமிக்கு வந்த சம்பவம் அல்ல. ஏனெனில், எதிர்காலத்தில் வரவிருக்கும் பரலோக ராஜ்யத்தின் மகிமையான நிலையை இயேசுகிறிஸ்து தம் சீஷருக்குக் காண்பித்த சிறப்பான ஒரு நிகழ்வாகவே மறுரூபமலைச் சம்பவம் உள்ளது.[105] அதாவது, பரலோகராஜ்யத்தில் இயேசுகிறிஸ்துவுடன் நாம் எப்படி இருப்போம் என்பதை அறியத்தருவதற்காக மறுரூபமலையில் இயேசுகிறிஸ்து மகிமையடைந்தவராகக் காட்சியளித்ததோடு, பரலோகத்திலிருக்கும் இருவரோடு அவர் பேசுகிறவராகவும் காணப்பட்டார். இதனால்தான் இச்சம்பவமானது, "இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.16:28, மாற்.9:1, லூக்.9:27) என்னும் இயேசுகிறிஸ்துவின் அறிவிப்பைத் தொடர்ந்து நடைபெற்றுள்ளது. இயேசுகிறிஸ்துவின் இக்கூற்றுக்கும் அவர் மறுரூபமாகியதற்கும் இடையில் இருக்கும் தொடர்பை நமக்கு அறியத்தருவதற்காகவே, "அவர் இவ்வாறு கூறி ஆறு நாளைக்குப் பின்னர் இச்சம்பவம் நடைபெற்றதாகச் சுவிசேஷப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (மத்.17:1, மாற்.9:2 லூக்.9:28).[106]

---

103 சில வேத ஆராய்ச்சியாளர்கள் இச்சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டு பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மரித்தவர்களின் ஆவிகள் பூமிக்குள் செல்வதாக நம்பினார்கள் என்று கூறுகின்றனர் (G.Robinson, *1&2 Samuel: International Theological Commentary*, 143; R.P.Gordon, *1& 11 Samuel: Library of Biblical Interpretation*, p. 195). ஆனால், பிரசங்கி 3:21, 12:7 போன்ற வசனங்கள் இதை முரண்படுத்துகின்றன. மரித்தோரின் ஆவிகள் பூமிக்குள் செல்கின்றன என்பது பிறமத மக்களின் நம்பிக்கையாகவே இருந்தது (L.Berkhof, *Systematic Theology*, pp. 685-686). எனவே. இதை வேதாகமத்திற்குள் புகுத்துவது தவறாகும்.

104 J.C.Laney, *1&2 Samuel: Everyman's Bible Commentary*, p. 79.

105 D.L.Turner, *Matthew: Cornerstone Biblical Commentary*, pp. 224-226; C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, p. 261. S.Toussaint, *Behold the King: A Study of Matthew*, p. 209; W.L.Lane, *Mark; The New International Commentary on the New Testament*, pp. 313-134; J.A.Brooks, *Mark: The New American Commentary*, p. 138.

106 R.T.Rrance, *Matthew: The New International Commentary on the New Testament*, p. 641. மத்தேயுவின் சுவிசேஷத்தில் உள்ள "ஆறு நாளைக்குப் பின்பு" என்னும் காலக் கணிப்பீடு லூக்காவில் "எட்டு நாளுக்குப் பின்பு" என்று இருப்பது அநேகருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், லூக்கா

உண்மையில், இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தில் வரும்போது எப்படி இருப்பார் என்பதை மறுரூபமலையில் அவருடைய மூன்று சீஷர்கள் கண்டனர். அவர் தம்முடைய பன்னிரு சீஷருக்கும் கூறியவிதமாக, அதாவது அவர் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் அவருடைய சீஷர்களில் சிலர் மரிப்பதில்லை என்று கூறியவிதமாக, அவருடைய சீஷர்களில் மூவர் மரிப்பதற்கும் முன்னர் இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தில் எவ்வாறு வருவார் என்பதை மறுரூபமலையில் கண்டனர். எனவே, மறுரூபமலை சம்பவத்தை மரித்தோரின் ஆவிகள் பூமிக்கு வந்து மனிதர்களுக்கு ஆலோசனையளிப்பதற்கு ஆதாரமாக எடுக்கமுடியாது. மறுரூபமலையில் மரித்த மோசேயும் எலியாவும் காட்சியளித்தது உண்மை என்றாலும், இவர்கள் மனிதர்களோடு தொடர்பு கொள்ளவோ, அவர்களை ஆசீர்வதிக்கவோ, அவர்களுக்கு ஆலோசனைகளும் வழிநடத்துதலும் கொடுக்கவோ இல்லை. இவர்கள் இயேசுகிறிஸ்துவிடமே பேசிக்கொண்டிருந்தார்கள். உண்மையில், மரித்தோரின் ஆவிகள் இவ்வுலகத்திற்கு வந்ததைப்பற்றி வேதாகமத்தில் எவ்வித சம்பவமும் இல்லை. இது நடைமுறையில் சாத்தியப்படாது என்றே வேதாகமம் கூறுகிறது.

## மூன்றாம் அத்தியாயம்

## தெய்வீக வழிநடத்துதலுக்கான தேவனுடைய வார்த்தை

மரித்தோரின் ஆவிகள் இவ்வுலகத்திற்கு வருவதில்லை என்பதை அறியத்தரும் வேதாகமத்தில், மரித்தோர் இவ்வுலகத்திற்கு வந்து மக்களுக்கு ஆலோசனைகள் கொடுத்து அவர்களை ஆசீர்வதித்ததுபற்றிய எவ்வித சம்பவங்களும் இல்லை. இதனால், ஆவிக்குரிய ஆலோசனைகளுக்கும் வழிநடத்துதல்களுக்கும் மரித்த பக்தர்களிடமும் நம்முடைய மூதாதையரிடமும் மன்றாடுவதில் எவ்வித பயனும் இல்லை.[107] வேதாகமம் சுட்டிக்காட்டுவதுபோல பிசாசின் ஆவிகளே மரித்தோரைப் போலக் காட்சியளித்து மக்களை வஞ்சித்து வருவதனால், மரித்தோரின் ஆவிகளைக் கொண்டுவருவதாகக் கூறும் நபர்களிடம் செல்வதையும், அவர்கள் செய்யும் காரியங்களில் ஈடுபடுவதையும் வேதாகமம் கடுமையான பாவங்களாகக் கருதி அவற்றைத் தடைசெய்துள்ளது.

### 1. வேதாகமமே நம்முடைய ஆவிக்குரிய வழிகாட்டி

கிறிஸ்தவர்களாகிய நாம் மரித்தோரின் ஆவிகளிடமிருந்து அல்ல, தேவனுடைய வார்த்தையான வேதாகமத்திலிருந்தே ஆவிக்குரிய வழிநடத்துதலையும்

---

"ஏறக்குறைய" எட்டு நாள் என்று கூறுவதனால் இவர் காலத்தை அண்ணளவாகவே கணிப்பிட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது (R.H.Stein, *Luke: The New American Commentary*, p. 283).

[107] மரித்த பக்தர்களிடம் மன்றாடுவதற்கு ஆதாரமாகக் காண்பிக்கப்படும் வசனங்கள் வேதாகமத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத புத்தகங்களில் இருந்தே எடுக்கப்படுவது வழக்கம். சில பாரம்பரியச் சபைகள், வேதாகமத்தில் இல்லாத புத்தகங்களை ஆதாரமாகக் கொண்டு மரித்தோரிடம் தங்கள் ஜெபங்களை ஏறெடுத்துவருகின்றனர். ஆனால், வேதாகமத்தில் இல்லாத புத்தகங்கள் தேவனுடைய வார்த்தை அல்ல என்பதனால், அவற்றை ஆதாரமாகக் கொண்டு மரித்தோரிடம் மன்றாடுவது அர்த்தமற்றது.

ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளவேண்டும். இதனால்தான், ஏசாயா என்னும் தீர்க்கதரிசி பின்வருமாறு அறிவுறுத்தியுள்ளார்:

> அவர்கள் உங்களை நோக்கி அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணு முணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்கவேண்டியதல்லவோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ? வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும். இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை (ஏசா.8:19-20).

நாம் ஏற்கனவே பார்த்தபடி, அஞ்சனம் பார்ப்பவர்கள் தங்களுக்குள் குடியிருக்கும் பிசாசுகளின் உதவியுடனேயே செயல்படுகின்றனர்.[108] இவர்கள் கொண்டுவரும் பிசாசுகளின் ஆவிகளுடைய பேச்சுக்களையே "முணுமுணென்று ஓதுகிறதாக" ஏசாயா குறிப்பிட்டுள்ளார்.[109] உண்மையில், "மரித்தோரின் ஆவிகளிடத்தில் ஆலோசனை பெறமுற்படுபவர்கள் பிசாசின் ஆவிகள் முணுமுணுக்கும் சத்தத்தையே கேட்பார்கள்."[110] அவர்களுக்குத் தெளிவான விளக்கங்கள் எதுவும் கிடைப்பதில்லை. இதனால் அவர்களுக்கு "விடியற்காலத்து வெளிச்சமில்லை" என்று ஏசாயா குறிப்பிட்டுள்ளார். தேவனுடைய வார்த்தையே "நம் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாய் இருப்பதனால்" (சங்.119:105), தேவனுடைய வார்த்தையைக் கருத்திற்கொள்ளாமல் "பிசாசின் ஆவிகளிடத்தில் குறிகேட்கச் செல்பவர்கள் இருளில் பாதை தெரியாமல் தடுமாறுகிறவர்களாகவே இருப்பார்கள்."[111] ஏனெனில், "மரித்தோரின் ஆவிகளிடத்தில் ஆலோசனைபெறச் செல்வது இருட்டுக்குள் செல்வதாகவே உள்ளது."[112] உண்மையில், வேதாகமத்தின் வெளிச்சத்தைத் தவிர, ஆவிக்குரிய ஆலோசனைகளுக்கும் வழிநடத்துதல்களுக்கும் வேறு வெளிச்சங்கள் எதுவும் உலகில் மனிதருக்கு இல்லை.[113] இதனால், "தேவனுடைய வார்த்தையை நிராகரிப்பது ஆவிக்குரிய இருளில் நம்மை மூழ்கடித்துவிடும்."[114] மரித்தோருக்கு எதுவும் தெரியாதிருப்பதனால் (பிர.9:5) அவர்களிடமிருந்து எவ்வித வெளிச்சமும் நமக்குக் கிடைப்பதில்லை.[115]

மரித்தோரின் ஆவிகளிடத்தில் ஆலோசனை பெறவேண்டும் என்று மற்றவர்கள் கூறும்போது, "நாம் மரித்தோரின் ஆவிகளிடமல்ல, தேவனிடமே விசாரிக்கவேண்டும்" என்று ஏசாயா கூறுகின்றார். உயிருள்ளோருக்காக மரித்தோரிடத்தில் விசாரிப்பது பைத்தியக்காரத்தனமானது என்பதை ஏசாயா இவ்வசனத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.[116] "மரித்தோர் ஒன்றும் அறியார்கள்" என்று பிரசங்கி 9:5 கூறுவதனால், அவர்களிடம்

---

108 பக்கங்கள்
109 G.V.Smith, *Isaiah 1-39: The New American Commentary*, p. 230; H.C.Leupold, *Exposition of Isaiah*, p. 177.
110 D.L.McKenna, *Isaiah 1-39: The Preacher's Commentary Volume 17*, p. 135.
111 G.W.Grogan, *Isaiah: The Expositor's Bible Commentary Volume 6, p. 73*.
112 J.A.Motyer, *Isaiah: The Bible Speaks Today*, p. 67.
113 J.N.Oswalt, *Isaiah 1-39: The International Commentary on the Old Testament*, p. 238.
114 L.L.Walker, *Isaiah: Cornerstone Biblical Commentary*, p. 48.
115 J.N.Oswalt, *Isaiah: The NIV Application Commentary*, p. 154.
116 J.N.Oswalt, *Isaiah 1-39: The International Commentary on the Old Testament*, p. 237.

ஆலோசனை கேட்பது அர்த்தமற்றது.[117] “நாம் மரித்த மனிதர்களிடமல்ல, ஜீவனுள்ள தேவனிடமே ஆலோசனைபெறவேண்டும்.”[118] ஏசாயா 8:20ல், “வேதம்” “சாட்சி ஆகமம்” என்னும் இரு சொற்களும் தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தையே குறிக்கின்றன. “வேதம்” என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல், வேதாகமத்தில் தேவன் கொடுத்துள்ள அறிவுறுத்தல்களைக் குறிக்கின்றது.[119] தேவன் வேதாகமத்தில் தம்மைப்பற்றிய சத்தியத்திற்கு சாட்சியாயிருப்பதனால், அவருடைய வார்த்தையான வேதம் இங்கு “சாட்சி ஆகமம்” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.[120] “தேவனிடத்தில் விசாரிக்கவேண்டும்” என்று 9ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ள ஏசாயா, இதற்காக “வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்” என்று 10ம் வசனத்தில் தெரிவித்துள்ளார். இதிலிருந்து, தேவனிடத்தில் விசாரிப்பது என்பது, அவருடைய வார்த்தையான வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்கும் செயலாகவே உள்ளது. எனவே, நாம் மரித்தவர்களின் ஆவிகளிடத்தில் அல்ல, தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தின் மூலமே நமக்கு அவசியமான தேவ ஆலோசனையையும் வழிநடத்துதலையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

## 2. பரலோகத்திற்கு எவரும் போய்வருவதில்லை

தற்காலத்தில் தேவனுடைய ஆலோசனையும் வழிநடத்துதலும் அவருடைய வார்த்தையான வேதாகமத்தின் மூலமே நமக்கு கிடைக்கின்றது என்பதைப் பல கிறிஸ்தவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர். இதனால், இவர்கள் தாங்கள் வாழும் பிரதேச மக்களுடைய பழக்கவழக்கங்களின்படி மரித்தோரின் ஆவிகளிடத்திலும், பரலோகத்திற்கு அல்லது நரகத்திற்குப் போய்வந்ததாகக் கூறி மக்களை வஞ்சிக்கும் நபர்களிடமும் ஆலோசனை பெறுவதற்காகச் செல்கின்றனர். மரித்தோரின் ஆவிகளிடத்திலிருந்து எவ்வித ஆலோசனையையும் பெறமுடியாது என்பதை அறியத்தரும் வேதாகமம், பரலோகத்திற்கு அல்லது நரகத்திற்குப் போய் வருபவர்கள் இவ்வுலகத்தில் இருப்பதாகவும் கூறவில்லை. இயேசுகிறிஸ்துவின் காலத்திலேயே பரலோகத்திற்குப் போய்வந்ததாகக் கூறி மக்களை வஞ்சிக்கும் நபர்கள் இருந்ததினால், பரலோக சத்தியங்களை அறிந்து கொள்ளக்கூடிய விதமாக எவரும் பரலோகத்துக்குப் போய்வரவில்லை என்பதை அவர் யோவான் 3:13ல் தெரிவித்துள்ளார். இவ்வசனத்தில் “பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை” என்னும் சொற்பிரயோகம் மூலமொழியில், இதுவரையில் எவரும் பரலோகத்துக்குச் செல்லவில்லை என்னும் அர்த்தமுடையதல்ல. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் பரலோகத்தில் இருக்கின்றனர் என்னும் வேதாகம சத்தியத்தை இவ்வாக்கியம் முரண்படுத்தவுமில்லை. ஏனெனில் மூலமொழியில் இவ்வாக்கியம், “மறுபடியும் திரும்பிவரும் விதத்தில் எவரும் பரலோகத்திற்குச் செல்லவில்லை” என்னும்

---

[117] G.V.Smith, *Isaiah 1-39: The New American Commentary*, p. 231.
[118] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 947.
[119] J.D.W.Watts, *Isaiah 1-33: Word Biblical Commentary Volume 24*, p. 127; H.C.Leupold, *Exposition of Isaiah*, p. 177.
[120] J.A.Motyer, *The Prophecy of Isaiah*, p. 96.

அர்த்தத்திலேயே உள்ளது.[121] இயேசுகிறிஸ்துவினுடைய காலத்தில், பரலோகத்திற்குப் போய்வந்த பரிசுத்தவான்களைப்பற்றிய கதைகள் யூதர்கள் மத்தியில் பிரபலமடைந்திருந்தன.[122] அதேபோல, அக்கால கிரேக்கர்கள் மத்தியிலும் வேறு உலகங்களுக்குச் சென்று மக்களுக்கு தெய்வச் செய்திகளைக் கொண்டுவரும் நபர்களைப்பற்றிய கதைகள் இருந்தன.[123] இதனால், இவ்வாறு எவரும் பரலோகத்திற்குப் போய்வரவில்லை என்பதை இயேசுகிறிஸ்து யோவான் 3:13ல் சுட்டிக்காட்டியுள்ளார். தற்காலத்தில் சிலர் தாங்கள் பரலோகத்திற்குச் சென்று வருவதாகக் கூறினாலும், இவர்களுடைய கூற்றுக்கள் இவர்களுக்கு கிடைத்த தரிசனங்களை அல்லது இவர்கள் கண்ட கனவுகளைப்பற்றிய விளக்கங்களாகவே உள்ளன. பரலோகத்தைப்பற்றி அதிகமாகச் சிந்தித்தவர்களாக நித்திரை கொள்பவர்களுக்கு இத்தகைய தரிசனங்களும் கனவுகளும் வருகின்றன. இவற்றைப் பரலோகத்திற்குச் சென்றுவரும் அனுபவங்களாகக் கருதமுடியாது.

வேதாகமத்தில் பவுல் யோவான் என்போர் பரலோகத்திற்குச் சென்றுள்ளதைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் (2கொரி.12:1-4, வெளி.4:1-2), இவைகள் யோவான் 3:13ல் உள்ள இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்குப் பின்னர் நடைபெற்றச் சம்பவங்களாக இருப்பதோடு, இவைகள் வேதாகம சத்தியத்தை வெளிப்படுத்துவதற்காக தேவனால் இவர்களுக்கு கொடுக்கப்பட்ட சிறப்பான அனுபவங்களாக உள்ளன. மேலும், வேதாகம சத்தியங்கள் அருளப்படுவது, வெளிப்படுத்தல் புத்தகத்தோடு நிறைவுபெற்றதினால் அதன்பின்னர் தெய்வீக சத்தியங்களை அறிந்துகொள்வதற்காகப் பரலோகத்திற்குச் சென்றுவரும் சிறப்பான வரத்தை எவரும் பெறவில்லை. வேதாகமத்தின் கடைசிப் புத்தகமான "வெளிப்படுத்தின விசேஷத்தோடு" மனிதருக்கான தேவனுடைய வெளிப்படுத்தல் நிறைவுபெற்றதனால்தான், "இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன்மேல் கூட்டுவார்" (வெளி.22:18) என்னும் எச்சரிப்புடன் இப்புத்தகம் முடிவடைகிறது. சில கிறிஸ்தவர்கள் இவ்வெச்சரிப்பை வேதாகமத்தின் கடைசிப் புத்தகத்திற்கு மட்டுமானது என்று வரையறை செய்தாலும்,[124] தேவன் நமக்குக் கொடுத்துள்ள வேதாகமத்திற்குப் புதிய விஷயங்களைச் சேர்க்கக் கூடாது என்னும் எச்சரிப்பு வேதாகமத்தில் பல தடவைகள் கொடுக்கப்பட்டுள்ளது (உபா.4:2, 12:32, நீதி.30:6).[125] இதனால், வெளிப்படுத்தல் 22:18லுள்ள எச்சரிப்பு,

[121] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 200.
[122] W.A.Meeks, *The Prophet King: Moses Traditions and the Johannine Christology*, pp. 110-111, 192-195, 235-236.
[123] G.L.Borchert, *John 1-11: New American Commentary*, pp. 180-181.
[124] A.T.Robertson, *Word Pictures in the New Testament Volume 6*, p. 487; A.F.Johnson, *Revelation: The Expositor's Bible Commentary Volume 12*, 602.
[125] உபாகமம் 4:2ல், "நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்" என்றும், உபாகமம் 12:32ல் "நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு. நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்" என்றும், நீதிமொழிகள் 30:6ல் "அவருடைய வசனங்களோடு

இப்புத்தகத்திற்குப் பின்னர் வேதாகமத்தில் எதையும் சேர்க்கக்கூடாது என்பதை அறிவுறுத்தும் கட்டளையாகவும் உள்ளது.[126] உண்மையில், வேதாகமத்தின் கடைசிப் புத்தகத்தோடு மனிதருக்கான தேவனுடைய வார்த்தை வெளிப்படுத்தப்படுவது நிறைவுபெற்றது. அதன்பின்னர், நாம் புதிய செய்திகளுக்காகப் பரலோகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறவர்களாக அல்ல, தேவன் நமக்கு கொடுத்துள்ள பரிசுத்த வேதாகமத்தை ஆராய்ந்து படிக்கிறவர்களாக இருக்கவேண்டும் என்பதே தேவனுடைய சித்தமும், அவர் நிர்ணயம் பண்ணியுள்ள திட்டமுமாயுள்ளது. இதனால்தான், இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தைவிட்டுச் செல்வதற்கும் முன்பு, புதிய செய்திகளுக்காகப் பரலோகத்தைப் பார்த்துக்கொண்டிராமல், தாம் கற்பித்த யாவையும் மற்றவருக்குப் போதிக்கும்படி தம்முடைய சீஷருக்குக் கட்டளையிட்டார் (மத்.28:20).

### 3. வேதாகமம் தேவனுடைய இறுதிவார்த்தை

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு கற்பித்தவைகள் அனைத்தும் வேதாகமத்தில் உள்ளன. இயேசுகிறிஸ்து பழைய ஏற்பாட்டை எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையாகக் கருதி,[127] தம்முடைய உபதேசங்கள் அனைத்திற்கும் அதையே ஆதாரமாகக் கொண்டிருந்தார்.[128] அவர் போதித்த காரியங்கள் அனைத்தும் புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளன. இவ்விரு ஏற்பாடுகளும் மனிதருக்கான தேவனுடைய வார்த்தையாக இருப்பதனால், நம்முடைய வாழ்வுக்கு அவசியமான தெய்வீக ஆலோசனைகள் அறிவுறுத்தல்கள் அனைத்தையும் கொண்டுள்ளன. இதனால் நாம் வேதாகமத்திற்கு அப்பால் வேறு வெளிப்படுத்தல்களையும் செய்திகளையும் தேடியலைவது அர்த்தமற்றது. வேதாகமத்திலுள்ள புத்தகங்கள் எழுதப்படும் வரை பல்வேறு முறைகளில் மனிதர்களோடு தொடர்புகொண்டு, அவர்களுக்கு அவசியமான ஆலோசனைகளை அளித்துவந்த தேவன்,[129] அதன் பின்னர் வேதாகமத்தின் மூலமே மனிதர்களோடு பேசுகிறவராக இருக்கின்றார். ஏனெனில், வேதாகமமே மனிதருக்கான

---

ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்ளுவார், நீ பொய்யனாவாய்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[126] R.L.Thomas, *Revelation 8-22: An Exegetical Commentary*, p. 516-518.

[127] பழைய ஏற்பாடு தேவனுடைய வார்த்தை என்பதை இயேசுகிறிஸ்து பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளார். உதாரணத்திற்கு சங்கீதம் 110:1ஐ அவர் உபயோகிக்கும்போது, தாவீது பரிசுத்த ஆவியினாலே சொல்லியிருக்கிறானே" என்று மாற்கு 12:36லும், மத்தேயு 22:43லும் குறிப்பிட்டுள்ளார். இதேபோல, யாத்திராகமம் 22:31ல் மோசேயினால் எழுதப்பட்ட வசனத்தை இயேசுகிறிஸ்து உபயோகிக்கும்போது, "தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டதை நீங்கள் வாசிக்கவில்லையா?" என்று மத்தேயு 22:31ல் கேட்டுள்ளார். மேலும், ஆதியாகமம் 2:24ஐ அவர் உபயோகிக்கும்போது, இவ்வசனம் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய கூற்றாக இராதபோதிலும், அது தேவன் சொன்னது என்றே மத்தேயு 19:4-5ல் குறிப்பிட்டுள்ளார். இயேசுகிறிஸ்துவைப் பொறுத்தவரை, பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களை எழுதியவர் யாராக இருந்தாலும், அவர்கள் எழுதியவைகள் அனைத்தும் தேவனுடைய வார்த்தையாகவே இருந்தன (J.W.Wenham, *Christ & The Bible*, pp. 23-24).

[128] சுவிசேஷப் புத்தகங்களில் இயேசுகிறிஸ்து பழைய ஏற்பாட்டை உபயோகித்ததைப்பற்றிய 36 நேரடியான குறிப்புகள் உள்ளன. எனினும், பல சந்தர்ப்பங்களில் பழைய ஏற்பாட்டை மேற்கோளாகக் காண்பிக்காவிட்டாலும், அவர் பழைய ஏற்பாட்டையே ஆதாரமாகக்கொண்டு பேசியுள்ளார் (B.H.Edwards, *Nothing But The Truth*, pp. 58-59).

[129] இதற்கு ஏறக்குறைய 1600 வருஷ காலம் எடுத்தது. இது பற்றிய முழுமையான விளக்கத்திற்கு எனது ***புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு*** என்னும் நூலைப் பார்க்கவும்.

தேவனுடைய இறுதி வார்த்தையாக உள்ளது. இதைப்பற்றி எபிரேயர் 1:1-2ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகைவகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார் (எபி.1:1-2)

இவ்வசனங்களில் "பூர்வ காலங்களில்" என்பது பழைய ஏற்பாட்டுக் காலத்தையும், "இந்தக் கடைசி நாட்கள்" என்பது புதிய ஏற்பாட்டுக் காலத்தையும் குறிக்கின்றது.[130] உலக சரித்திரத்தைப்பற்றிய வேதாகமக் காலகட்டங்களின்படி இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலமே கடைசி காலமாயுள்ளது.[131] எனவே, நாம் இப்பொழுது கடைசிக் காலத்தில் வாழ்கின்றோம். இது கடைசிக் காலம் என்பதை 1யோவான் 2:18 நேரடியாகவே அறியத்தருகின்றது. எபிரேயர் 1:2ன்படி, இக்கடைசிக் காலத்தில் தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமே நம்மோடு திருவுளம்பற்றியுள்ளார் (அதாவது பேசியுள்ளார்). ஆனால் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பங்கு பங்காகவும் வகைவகையாகவும் நம்முடைய பிதாக்களோடு பேசியுள்ளார். எபிரேயர் நிருபம் யூதக்கிறிஸ்தவர்களுக்கே எழுதப்பட்டுள்ளமையால், இவ்வசனத்தில் "பிதாக்கள்" என்பது யூதர்களின் பிதாக்களான பழைய ஏற்பாட்டுக்கால பக்தர்களையே குறிக்கின்றது.[132] தேவன் இவர்களோடு தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசியுள்ளார். அதுவும் பங்கு பங்காகவும் (அதாவது பகுதி பகுதியாகவும்) வகைவகையாகவும் (அதாவது, வித்தியாசமான முறைகளிலும்) பேசியுள்ளார்.[133] அதாவது, பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவன் மக்களோடு பேசும்போது தம்மைப் பற்றிய சகல விஷயங்களையும் ஒரே நேரத்தில் முழுமையாக வெளிப்படுத்தாமல் படிப்படியாக, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கொஞ்சம் கொஞ்சமாக, ஆனால், வித்தியாசமான முறைகளில் வெளிப்படுத்தினார். சில சந்தர்ப்பங்களில் அவர் நேரடியாக மக்களுக்குக் காட்சியளிப்பதன் மூலம்[134] அல்லது தரிசனங்கள் கனவுகள் மூலம் பேசினார் (ஆதி.28:13, ஏசா.1:1, 6:1). சில வேளைகளில் தேவன் பேசும்

---

[130] F.F.Bruce, *Hebrews: The New International Commentary on the New Testament*, p. 45.

[131] இதனால்தான் இயேசுகிறிஸ்துவின் முதல் வருகை கடைசிக் காலத்தில் நடைபெற்றுள்ளதாக 1பேதுரு 1:20ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கடைசிக் காலத்தில் நிறைவேறும் தீர்க்கதரிசனம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியுள்ளதாக அப்போஸ்தலர் 2:17ல் பேதுரு குறிப்பிட்டுள்ளதும் இதை அறியத்தருகின்றது.

[132] இவ்வசனத்தில் "பிதாக்கள்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல், புதிய ஏற்பாட்டில் "முற்பிதாக்களையே" (அதாவது ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு) என்போரையே குறித்தாலும் (யோவா.7:22), ரோ.9:5) இவ்வசனத்தில் பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் அனைவரையும் குறிப்பிடும் விதத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது (L.Morris, *Hebrews: The Expositor's Bible Commentary Volume 12*, p. 12).

[133] இலகு தமிழ் மொழிபெயர்ப்பில் இவ்வசனம் "முற்காலத்தில் இறைவன் பல தடவைகள், வெவ்வேறு விதங்களில் இறைவாக்கினர்கள் மூலமாய் நமது முற்பிதாக்களுடன் பேசினார். ஆனால் இந்தக் கடைசி நாட்களில் அவர் தமது மகன் மூலமாகவே நம்மோடு பேசியிருக்கிறார்" என்றும், திருவிவிலியத்தில், "பலமுறை, பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

[134] இத்தகைய சந்தர்ப்பங்களில் "கர்த்தருடைய தூதனானவர்" என்னும் பெயரில் தேவன் மனிதருக்குத் தம்மை வெளிப்படுத்தி அவர்களோடு பேசினார் (ஆதி.16:7-13, 31:11-13). இது பற்றிய மேலதிக விபரத்திற்கு எனது ***யெகோவாவின் சாட்சிகளும் வேதாகம சத்தியங்களும்*** என்னும் நூலைப் பார்க்கவும்.

சத்தத்தை மாத்திரம் மனிதர் கேட்டனர் (உபா.4:11-12, 4:15. 5:1-24). ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தீர்க்கதரிசிகளின் மூலமே தேவன் மனிதர்களோடு பேசினார்.[135] இவையனைத்தும் பழைய ஏற்பாட்டில் உள்ளன. ஆனால், இக்கடைசிக் காலத்தில் தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலம் தம்மை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளதோடு (யோவா.1:18, 14:9)[136] அவர் மூலமாகவே நம்மோடு பேசியுள்ளார் (யோவா.12:49-50).[137] இதுவே எபிரேயர் 1:1-2 நமக்கு அறியத்தரும் சத்தியமாகும்.

நாம் கடைசிக் காலத்தில் வாழ்வதனால், தற்காலத்தில் தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நம்மோடு பேசுகின்றார். எனினும், இது வேதாகமத்தின் மூலமாக நடைபெறும் பேச்சாகவே உள்ளது. ஏனெனில், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசிகள் மூலமாகத் தேவன் பேசியவைகள் அனைத்தும் எழுத்துவடிவம் பெற்றுள்ளதைப் போலவே, அவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாகப் பேசியவைகள் அனைத்தும் புதிய ஏற்பாட்டில் எழுத்துவடிவம்பெற்ற புத்தகங்களாக உள்ளன. மேலும், எபிரேயர் 1:2ல், “இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்” என்னும் வாக்கியத்தில் “திருவுளம்பற்றினார்” என்பது மூலமொழியில் “தொடர்ச்சியாக நடைபெறுகின்ற பேச்சை” அல்ல, “ஒரு தரம் பேசி முடிக்கப்பட்ட விஷயத்தையே” குறிக்கின்றது. அதாவது, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பல்வேறுவிதமான முறைகளில் வெளிப்படுத்தப்பட்டு வந்த மனிதருக்கான தேவனுடைய வார்த்தை, இயேசுகிறிஸ்துவில் முழுமையும் இறுதி நிலையையும் அடைந்தது.[138] இதனால் இயேசுகிறிஸ்துவின் மூலம் பேசப்பட்ட விஷயங்கள், “பழைய ஏற்பாட்டுக்கால வெளிப்படுத்தலின் தொடர்ச்சியாகவும்”[139] “மனுக்குலத்திற்கான

---

[135] பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மனிதர்கள் தேவனுடைய ஆலோசனையைப் பெறுவதற்கு தீர்க்கதரிசிகளிடம் செல்வது வழக்கம். இதைப்பற்றி 1சாமுவேல் 9:9ல் “முற்காலத்தில் இஸ்ரவேலில் யாதொருவர் தேவனிடத்தில் விசாரிக்கப்போனால், ஞானதிருஷ்டிக்காரனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்பார்கள். இந்நாளிலே தீர்க்கதரிசி என்னப்படுகிறவன் முற்காலத்தில் ஞானதிருஷ்டிக்காரன் என்னப்படுவான்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1சாமுவேல் 9-10, நியாயதிபதிகள் 4 என்னும் அதிகாரங்கள் இதற்கான சில உதாரணங்களாக உள்ளன. அக்காலத்தில் தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியானவரின் உதவியினால் தேவனுடைய சிந்தையை அறிந்தவர்களாகவும், தேவனுடைய ஆலோசனைகளை மற்றவர்களுக்கு அறிவிப்பவர்களாகவும் இருந்தனர் (B.Waltke, *Knowing God’s Will*, p. 40).

[136] யோவான் 1:18ல், “தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. யோவான் 14:9ல், “என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்” என்று இயேசுகிறிஸ்துவே தெரிவித்துள்ளார்.

[137] எபிரேயர் 1:1-2 கூறுகின்ற விதமாக இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குப் போதித்தவைகள் தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாகப் பேசியவைகளாகவே உள்ளன. இதனால்தான், தேவன் தமக்குக் கட்டளையிட்டபடியே தாம் பேசுவதாக யோவான் 12:49-50ல் இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். இவ்வசனங்களில் “நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன். ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன்” (யோவான் 12:49-50) என்று அவர் குறிப்பிட்டுள்ளார். உண்மையில், “பிதாவினுடைய செய்தியையே இயேசுகிறிஸ்து மக்களுக்கு அறிவித்தார்” (F.F.Bruce, *The Gospel of John: Introduction, Exposition and Notes*, p. 275).

[138] F.F.Bruce, *Hebrews: The New International Commentary on the New Testament*, p. 46.

[139] D.A.Hagner, *Hebrews: New International Biblical Commentary*, p. 21.

தேவனுடைய இறுதி வார்த்தையாகவும்”[140] “முழுமையான வெளிப்படுத்தலாகவும் உள்ளது.”[141]

தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலம் பேசியவைகள் அனைத்தும் புதிய ஏற்பாட்டில் உள்ளன. இயேசுகிறிஸ்து இவற்றைத் தம்முடைய அப்போஸ்தலர்களின் மூலம் எழுதியுள்ளார். இதற்காக அவர் தம்முடைய சீஷர்களில் பன்னிருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு “அப்போஸ்தலர்” என்று பெயரிட்டு (லூக்.6:13-16),[142] அவர்களுக்குத் தம்முடைய அதிகாரத்தையும் கொடுத்ததோடு (மாற்.3:13-15, மத்.10:40, லூக்.10:16), அவர்களை எப்பொழுதும் தம்மோடு வைத்திருந்து அவர்களுக்குத் தெய்வீகக் காரியங்களை அறிவித்து வந்தார் (மாற்.4:10-11, மத்.13:11, அப்.1:3).[143] மேலும், தாம் போதித்தவைகளைப் பிற்காலத்தில் அவர்களுக்கு நினைவூட்டுவதற்காகப் பரிசுத்தஆவியானவரை அருள்வதாகவும் அவர்களுக்கு வாக்களித்தார் (யோவா.14:26).[144] இது இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர்களுக்குக் அருளப்பட்ட சிறப்பான ஒரு ஆசீர்வாதமாகும்.[145] இதனால்தான், இயேசுகிறிஸ்துவோடு இருந்த காலத்தில் அவருடைய போதனைகளை சரியானவிதத்தில் புரிந்து கொள்ளாமலிருந்த அப்போஸ்தலர்கள் பிற்காலத்தில் அவற்றைச் சரியானவிதத்தில் புரிந்துகொண்டனர் (யோவா.2:19-22, 12:16, 20:9). மேலும், இயேசுகிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களுக்குப் போதித்தவைகளைப் பிற்காலத்தில் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு நினைவூட்டியதினால் அவர்கள் அவற்றைப் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களாக எழுதியுள்ளனர்.[146] புதிய ஏற்பாட்டில் அதிகளவு புத்தகங்களை எழுதியுள்ள பவுலும் இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாக, ஏறக்குறைய மூன்று

---

140 G.B.Wilson, *New Testament Commentaries Volume 2*, p. 325.

141 B.Barton & L.K.Taylor ed., *Life Application New Testament Commentary*, p. 1012.

142 “அப்பொஸ்டொலொஸ்” என்னும் கிரேக்கச் சொல்லே தமிழில் அப்போஸ்தலன் என்று எழுதப்பட்டுள்ளது. இதன் அர்த்தம், “அதிகாரத்துடன் அனுப்பப்பட்டவன்” ஆகும். இயேசுகிறிஸ்துவின் ஊழியக் காலத்தில் அவருக்குப் பல சீஷர்கள் இருந்தார்கள் (லூக்.10:1, யோவா.6:66-67) “பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்” என்பதை லூக்கா 6:13 அறியத்தருகின்றது.

143 இயேசுகிறிஸ்து பகிரங்கமாக மக்களுக்குப் போதித்தவற்றைவிட அதிகமான விஷயங்களைத் தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு அறிவித்துவந்தார். இயேசுகிறிஸ்து உவமைகளாகச் சொன்ன சில காரியங்கள் சாதாரண மக்களுக்கு மறைபொருளாகவும், அப்போஸ்தலருக்கு விளக்கமாகவும் அறிவிக்கப்பட்டது. இதனால்தான், தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகின்றது” (மாற்.4:11) என்றும், பரலோக ராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. அவர்களுக்கோ அருளப்படவில்லை” (மத்.13:11) என்றும், தேவனடைய ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. மற்றவர்களுக்கோ, அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கத்தக்கதாக அவைகள் உவமைகளாகச் சொல்லப்படுகிறது” (லூக்.8:10) என்றும் அப்போஸ்தலர்களிடம் தெரிவித்த இயேசுகிறிஸ்து, பல சந்தர்ப்பங்களில் பகிரங்கமாக “உவமைகளினாலேயன்றி அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை. அவர் தம்முடைய சீஷர்களோடு தனித்திருக்கும்போது, எல்லாவற்றையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னார்” (மாற்.4:34). இதைப்போலவே இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த பின்பும் நாற்பது நாட்களாக “அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி அவர்களுக்குப் போதித்தார்” (அப்.1:3).

144 யோவான் 14:26ல் “என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்” என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு வாக்களித்துள்ளார்.

145 D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 505.

146 G.L.Borchert, *John 12-21: The New American Commentary*, p. 132; A.J.Kostenberger, *John: Baker Exegetical Commentary on the New Testament*, p. 442.

வருஷகாலம் அவரோடு இருந்து (கலா.1:15-16),[147] தேவ வெளிப்படுத்தல்களைப் பெற்றிருந்தார் (கலா.1:12, 1கொரி.11:23, 2:10, 2:12-13, எபே.3:2-3). புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை எழுதியவர்களில் மாற்குவும் லூக்காவும் இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்களாக இராதபோதிலும், இவர்களில் மாற்கு அப்போஸ்தலனாகிய பேதுருவின் சீஷனாக இருந்ததினால் (1பேது.5:13),[148] பேதுருவின் பிரசங்கங்களை ஆதாரமாகக் கொண்டே இவர் தன்னுடைய சுவிசேஷத்தை எழுதியுள்ளதை ஆதிசபைப்பிதாக்களின் குறிப்புகள் அறியத்தருகின்றன.[149] லூக்காவின் சுவிசேஷம், ஆராய்ச்சியின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளபோதிலும் (லூக்.1:1-4), லூக்காவின் ஆராய்ச்சி அப்போஸ்தலனாகியப் பவுலிடமிருந்து அறிந்துகொண்ட விஷயங்களையே ஆதாரமாகக் கொண்டிருந்தது. புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை எழுதிய ஏனைய நபர்களில் யூதாவும் யாக்கோபும் இயேசுகிறிஸ்துவின் சகோதரர்களாகவும்,[150] ஏனையவர்கள் அவருடைய அப்போஸ்தலர்களாகவும் உள்ளனர். இதனால் புதிய ஏற்பாட்டிலுள்ள 27 புத்தகங்களும் இயேசுகிறிஸ்துவின் மூலமாக மனிதருக்கு அருளப்பட்ட தேவனுடைய வெளிப்படுத்தலாகவே உள்ளன.

மனிதருக்கான தேவனுடைய வெளிப்படுத்தல் இயேசுகிறிஸ்துவில் முழுமையும் முடிவும் அடைந்தன என்னும் சத்தியத்தை யோவான் 16:13ஐ முரண்படுத்துவதாக நமக்குத் தென்படலாம். ஏனெனில் இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து, "சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்." என்று தம் சீஷரிடம் தெரிவித்துள்ளார். ஆனால் இவ்வாக்குத்தத்தம், இயேசுகிறிஸ்துவில் முழுமையடையும் தேவனுடைய வெளிப்படுத்தலைப் புரியவைக்கும் செயலாக உள்ளதே தவிர, புதிய

---

147 கலாத்தியர் 1:15-18, அப்போஸ்தலர் 9:1-20 என்னும் வசனங்களின்படி, எருசலேமிலிருந்து தமஸ்குவுக்குச் செல்லும் பவுல் வழியில் இயேசுகிறிஸ்துவைச் சந்தித்ததினால் கிறிஸ்தவராகினார். அதன்பின்னர் தமஸ்குவுக்குச் செல்லும் அவர் (அப்.9:1-20) அங்கிருந்து அரபி தேசத்துக்குச் சென்று மறுபடியுமாகத் தமஸ்குவுக்கு வருகின்றார் (கலா.1:17). மூன்று வருஷம் சென்றபின்பு தான் மறுபடியுமாக எருசலேமுக்குச் சென்றதாக கலாத்தியர் 1:18ல் குறிப்பிட்டுள்ளார். இந்த மூன்று வருஷம், கலாத்தியர் 1:15-16ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவர் இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து கணக்கிடப்பட்டுள்ளது. யூதர்களுக்கு அப்போஸ்தலர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட பன்னிரு சீஷர்களுடனும் இயேசுகிறிஸ்து ஏறக்குறைய மூன்று வருஷகாலம் இருந்ததபோலேவே புறஜாதியாருக்கு அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்ட பவுலுடனும் இயேசுகிறிஸ்து மூன்று வருஷகாலம் இருந்து தெய்வீகக் காரியங்களை வெளிப்படுத்தியுள்ளார். இதனால்தான், "என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனு'னால் பெற்றதுமில்லை., மனு'னால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்" (கலா.1:11-12) என்றும், "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்" (1கொரி.11:23) என்றும் பவுல் தெரிவித்துள்ளார்.

148 இதனால்தான், மாற்குவைப் பேதுரு "என் மகன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

149 2ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பேப்பியஸ் என்னும் சபைப்பிதா, இதைப்பற்றி சபையின் மூப்பனிடத்திலிருந்து அறிந்து கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களான பேதுரு யோவான் என்போர் மூப்பர்களாக அறியப்பட்டிருந்தனர் (1பேது.5:1, 2யோவா.1:2, 3யோவா.1:1). பேப்பியஸ் யோவானுடைய சீஷராக இருந்ததினால், அவர் யோவானிடமிருந்தே மாற்குவின் சுவிசேஷம் எவ்வாறு எழுதப்பட்டது என்பதை அறிந்துள்ளார் (Eusebius, *Historia Ecclesiastica*, 3.39.1-17). இதைப்போல, 2ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இரேனியஸ் என்னும் சபைப்பிதா, "பேதுருவும் பவுலும் ரோமில் சபையின் அஸ்திவாரத்தைப் போட்டபின்னர், பேதுருவின் பிரசங்கங்களை அவருடைய சீஷன் மாற்கு சபைக்கு எழுதிக்கொடுத்ததாகக்" குறிப்பிட்டுள்ளார் (Irenaeus, *Against Heresies*, 3.1.1). சபைப்பிதா ஜஸ்டின் மாட்டரின் எழுத்துக்களும் இதை உறுதிப்படுத்துகின்றன (J.Martyr, *Dialogue With Trypho*, 106).

150 இயேசுகிறிஸ்துவின் ஊழியக் காலத்தில் அவருடைய சகோதரர்கள் உண்மையில் அவர் யார் என்பதை அறியாதவர்களாக இருந்தனர். ஆனால் இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த பின்பு அவர்களுக்குக் காட்சியளித்ததினால் அவர்கள் அவரைத் தெய்வமாக ஏற்றுக்கொண்டனர்.

விஷயங்களை அறிமுகப்படுத்துவதைப்பற்றியதாக இல்லை.[151] ஏனெனில், பரிசுத்த ஆவியானவரின் போதனை, ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை நினைவூட்டும் பணியாகவே இருக்கும் என்பதை யோவான் 14:26ல் இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். இதனால்தான், "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" என்று யோவான் 14:26ல் அவர் வாக்களித்துள்ளார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குப் போதித்த சகல காரியங்களையுமே இவ்வசனத்தில் அவர் "எல்லாவற்றையும்" என்று குறிப்பிட்டுள்ளார்.[152] இயேசுகிறிஸ்து போதித்தவற்றைச் சீஷர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருந்ததினால் (யோவா.2:22, 12:16), பரிசுத்தஆவியானவர் அவற்றை அவர்களுக்குப் போதிப்பார் என்று அவர் இவ்வசனத்தில் வாக்களித்துள்ளார்.[153] இங்கு "போதித்தல்" புதிய காரியங்களை அறிவிப்பதை அல்ல, இயேசுகிறிஸ்து ஏற்கனவே போதித்தவற்றை விளக்கிக்கூறுவதாகவே உள்ளது.[154] உண்மையில், யோவான் 14:26ல் கூறியதையே இயேசுகிறிஸ்து யோவான் 16:13ல் மறுபடியுமாகத் தம் சீஷர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது, இயேசுகிறிஸ்து இவ்வுலகில் மனிதனாக வாழ்ந்த காலத்தில் தம்முடைய சீஷர்களுக்குப் போதித்தவற்றையே, பிற்காலத்தில் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு விளக்கிக்கூறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.[155] தேவனைப் பற்றிய சகல காரியங்களையும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு வெளிப்படுத்தியிருந்ததினால் (யோவா.15:15),[156] அதன் பின்னர் பரிசுத்த ஆவியானவர் புதிய காரியங்கள் எதையும் அறிவிக்கவேண்டியதாயிருக்கவில்லை.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு வெளிப்படுத்தியவைகளையே பிற்காலத்தில் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு நினைவூட்டினார் என்பதை யோவான் 16:13 சிறப்பான விதத்தில் அறியத்தருகின்றது. இவ்வசனத்தில் "சகல சத்தியத்திற்குள்ளும்" என்னும் சொற்பிரயோகம் மூலமொழியில், "புதிய காரியங்கள்" என்னும் அர்த்தத்தைத் தருவதில்லை. அதேபோல பல சத்தியங்கள் இருப்பதாகவும் இவ்வசனம் கூறவில்லை. இயேசுகிறிஸ்துவே சத்தியமாக இருப்பதனால் (யோவா.14:6), பரிசுத்த ஆவியானவர் இதைவிட மேலதிகமாகப் புதிய சத்தியத்தை வெளிப்படுத்துவதில்லை. உண்மையில், "இயேசுகிறிஸ்துவில் இருக்கும் சத்தியம் (எபே.4:21) முழுமையாக விளக்கிக் கூறப்படுவதே சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தப்படுவதாக யோவான் 16:13ல்

---

151 F.F.Bruce, *The Gospel of John: Introduction, Exposition and Notes*, p. 320.
152 C.G.Kruse, *John: Tyndale New Testament Commentary*, p. 311.
153 L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 583.
154 F.F.Bruce, *The Gospel of John: Introduction, Exposition and Notes*, p. 305.
155 W.Hendriksen, *John: New Testament Commentary*, p. p. 328.
156 யோவான் 15:15ல் "என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளார். அக்காலத்தில் நண்பர்கள் எவ்வித ஒளிவும் மறைவும் இன்றி மனதிலிருக்கும் சகல காரியங்களையும் ஒருவரோடொருவர் பகிர்ந்துகொள்வது வழக்கம். இதனால் தேவனைப்பற்றி தாம் அறிந்திருந்த சகல காரியங்களையும் தம்முடைய சீஷர்களுக்கு வெளிப்படுத்திய இயேசுகிறிஸ்து அவர்களைத் தம்முடைய நண்பர்களாக இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார் (A.T.Lincoln, *John: Black's New Testament Commentary*, p. 406).

குறிப்பிடப்பட்டுள்ளது."[157] அதாவது, "இயேசுகிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளமுடியாமல் இருந்த சீஷர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் அச்சத்தியத்தை விளக்கிக்கூறுவார் என்பதே சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தப்படுவதாக யோவான் 16:13ல் குறிப்பிடப்பட்டுள்ளது."[158] இதனால்தான் பரிசுத்த ஆவியானவர், "தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார் (யோவா.16:13-14) என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல "பரிசுத்த ஆவியானவர் சுயமாகப் பேசுவதில்லை" என்பதனால் அவர் தன்னிச்சையாகப் புதிய போதனைகளை அறிமுகப்படுத்துவதில்லை.[159] இயேசுகிறிஸ்துவினால் சீஷருக்கு வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தையே பரிசுத்த ஆவியானவர் போதிப்பார். இதனால்தான், "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். உண்மையில், பரிசுத்தஆவியானவர் அறிவிக்கும் "சகல சத்தியங்களும் இயேசுகிறிஸ்து போதித்தவைகளாகவே உள்ளன."[160] இவையனைத்தும் புதிய எற்பாட்டில் உள்ளன.[161]

இயேசுகிறிஸ்துவினால் சீஷருக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளையே பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு அறிவிப்பார் என்றே யோவான் 14:26, 16:13-14 என்னும் வசனங்கள் கூறினாலும், அவர் "வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்னும் வாக்கியம், பரிசுத்த ஆவியானவர் புதிய விஷயங்களையும் வெளிப்படுத்துவார் என்னும் எண்ணத்தை நமக்கு ஏற்படுத்தலாம். ஆனால் இவ்வாக்கியத்தில் இயேசுகிறிஸ்து சொல்லமுற்படும் விஷயத்தை நாம் விளங்கிக் கொள்வதற்கு, இதற்கு முன் உள்ள வசனத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ள காரியத்தை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். ஏனெனில், "சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" என்று இயேசுகிறிஸ்து கூறுவதற்கு முன்பு, "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" (யோவா. 16:12) என்று அவர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். "யோவான் 13 முதல் 16 வரையிலான அதிகாரங்கள், சிலுவை மரணத்திற்கு முன்பு இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுடன் உரையாடிய வார்த்தைகளாக இருப்பதனால், தமக்கு நேரிடப்போகும் பாடுகளினதும் மரணத்தினதும் கொடூரத்தையே சீஷர்களினால் தாங்கிக்கொள்ள முடியாத காரியங்களாக அவர் யோவான் 16:12ல் குறிப்பிட்டுள்ளார்."[162] யோவான்

---

157 F.F.Bruce, *The Gospel of John: Introduction, Exposition and Notes*, p. 320.
158 G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Volume 36-2nd Edition*, p. 283.
159 L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 621.
160 C.G.Kruse, *John: Tyndale New Testament Commentary*, p. 311.
161 R.C.H.Lenski, *The Interpretation of St.John's Gospel*, p. 1014.
162 C.G.Kruse, *John: Tyndale New Testament Commentary*, p. 331.

13:19, 14:29-30, 16:4ல் அவர் தம்முடைய மரணத்தைப்பற்றிய ஒரு சில விஷயங்களை அவர்களுக்கு அறிவித்திருந்தபோதிலும், அதற்கு மேல் எதையும் அவர்களால் தாங்கிக் கொள்ளமுடியாது என்பதை அறிந்திருந்தார். இதனால் தமக்கு நேரிடவிருக்கும் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் என்பவற்றின் அவசியத்தையும் இவற்றின் சிறப்பம்சங்களையும் அவர் சீஷர்களுக்கு விபரமாக விளக்கிச் சொல்லவில்லை. இவற்றைப் பரிசுத்தஆவியானவர் அவர்களுக்கு விளக்கிக் கூறுவார் என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். இயேசுகிறிஸ்து இவ்வுலகில் மனிதனாக வாழ்ந்த காலத்தில் தம்முடைய மரணத்தைப்பற்றி கூறியவற்றைச் சீஷர்கள் புரிந்துகொள்ள வில்லை (யோவா.2:19-22). இதனால், இவற்றைப் பரிசுத்த ஆவியானவர் விளக்கமாகப் போதிப்பார் என்றே இயேசுகிறிஸ்து யோவான் 16:12-13ல் தெரிவித்துள்ளார். எனவே, பரிசுத்த ஆவியானவர் அறிவிக்கும் “வரப்போகிற காரியங்கள்” என்பது, எதிர்கால சம்பவங்களோ புதிய வெளிப்படுத்தல்களோ அல்ல. “அவை இயேசுகிறிஸ்துவினுடைய வாழ்வில் வரப்போகும் பாடுகள் மரணம் உயிர்த்தெழுதல் என்பவற்றையும், அவற்றின் சிறப்பம்சங்களையுமே குறிக்கின்றன.”[163] இதனால்தான், பரிசுத்தஆவியானவரைப் பெற்ற பின்பே சீஷர்கள் இயேசுகிறிஸ்து தம்முடைய பாடுகளையும் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும்பற்றி கூறியவற்றைப் புரிந்துகொண்டனர் (யோவா.2:22, 12:16).

### 4. வேதாகமத்தின் மூலமே தேவன் பேசுகிறார்

மனிதருக்கான தேவனுடைய வெளிப்படுத்தல் இயேசுகிறிஸ்துவில் முழுமையும் முடிவும் அடைந்ததினாலும், இவ்வெளிப்படுத்தல் அவருடைய வார்த்தையான வேதாகமத்தில் எழுதப்பட்டிருப்பதனாலும், தற்காலத்தில் அவர் வேதாகமத்தின் மூலமே நம்மோடு பேசுகிறவராக இருக்கின்றார். இச்சத்தியத்தை வேதாகம சரித்திரம் சிறப்பான விதத்தில் நமக்கு அறியத்தருகின்றது. இஸ்ரவேல் ஜனங்களோடு பேசுவதற்காக நாற்பது வருஷங்களாக மோசேயோடு நேரடியாகப் பேசி வந்த தேவன், அதன் பின்னர் யோசுவாவோடும் நேரடியாகப் பேசியது உண்மை என்றாலும், மோசேயுடன் நேரடியாகப் பேசிய அளவிற்குத் தேவன் யோசுவாவோடு நேரடியாகப் பேசவில்லை. ஏனெனில், தேவன் மோசேயோடு நேரடியாகப் பேசியவைகள் அனைத்தும் நியாயப்பிரமாணப் புத்தகமாக (அதாவது, பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்கள்) எழுதப்பட்டிருந்ததேயாகும். இதனால், மோசேயின் மரணத்தின் பின்னர் யோசுவாவை இஸ்ரவேல் மக்களின் தலைவனாக்கிய தேவன் (யோசு.1:1-2), “நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன். நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை” (யோசு.1:5) என்று யோசுவாவுக்கு வாக்களித்ததோடு, மோசேயினால் எழுதப்பட்ட நியாயப்பிரமாணப் புத்தகத்தின்படி வாழும்படி அறிவுறுத்தினார். இதனால்தான், யோசுவா 1:7-9ல் தேவன் பின்வருமாறு யோசுவாவிடம் கூறினார்:

> என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கமாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு. நீ

[163] K.J.V.Tasker, *John, Tyndale New Testament Commentary,* p. 181.

போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக. இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய். நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு. திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார் (யோசு.1-7-9).

போகும் இடமெல்லாம் கூடவே இருப்பதாக வாக்களித்த தேவன், மோசேயோடு பேசியவிதமாகவே உன்னோடும் பேசுவேன் என்று யோசுவாவுக்கு கூறவில்லை. மாறாக, மோசேயினால் எழுதப்பட்ட புத்தகத்தைச் சுட்டிக்காட்டி, “இந்த நியாயப்பிரமாண புத்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக” (யோசு.1:8) என்றே கூறினார். ஏனெனில், தேவன் மோசேயோடு பேசியவைகள் எழுதப்பட்ட புத்தகமாக இருந்ததினால், அவற்றை மறுபடியுமாக யோசுவாவோடு நேரடியாகப் பேசவேண்டியதாயிருக்கவில்லை. உண்மையில், அக்காலத்தில் எழுதப்பட்டிராத புதிய காரியங்களை மாத்திரமே தேவன் யோசுவாவோடு நேரடியாகப் பேசினார். இதைப்போலவே, வேதாகமத்தின் சகல புத்தகங்களும் எழுதப்பட்டு ஒன்றாகத் தொகுக்கப்படும் வரை பல்வேறுவிதமான முறைகளில் மனிதர்களோடு நேரடியாகப் பேசிவந்த தேவன், அதன்பின்னர், எழுதப்பட்ட தம்முடைய வார்த்தையான வேதாகமத்தின் மூலமே மனிதரோடு பேசுகிறவராக இருக்கின்றார். எனவே, நமக்குத் தேவையான ஆலோசனைகளுக்காகவும் தேவவழிநடத்துதலுக்காகவும் நாம் எங்கும், எவரிடமும் செல்லவேண்டியதில்லை. நமக்குத் தேவையான சகல ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் நம்மிடம் இருக்கும் வேதாகமத்திலேயே உள்ளன. இதனால் வேதாகமம் பின்வருமாறு கூறுகிறது:

நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல. நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள் நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல. நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல. நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது (உபாகமம் 30:11-14).

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு சமீபமாயிருப்பதை உபாகமம் 4:7-8ல் அறியத்தந்த மோசே, இவ்வசனங்களில், தேவனுடைய வார்த்தை மக்களுக்கு சமீபமாயிருப்பதைச்

சுட்டிக்காட்டுகின்றார். எனினும் உபாகமம் 4:7-8ல்,[164] "தேவனுடைய வார்த்தை மக்களுக்கு சமீபமாயிருப்பதினாலேயே தேவனும் அவர்களுக்கு சமீபமாயிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது."[165] அக்காலத்தில் மனிதர்கள் தேவனுடைய வார்த்தையை முழுமையாக மனனம் செய்யவேண்டியவர்களாயிருந்தனர் (உபா.6:6).[166] இதனால் தேவனுடைய வார்த்தை அவர்களுக்கு மிகவும் சமீபமாய் "அவர்களுடைய வாயிலும் இருதயத்திலும் இருப்பதாக" உபாகமம் 30:14ல் குறிப்பிடப்பட்டுள்ளது.[167] உபாகமம் 30:11லுள்ள "கட்டளை" தேவனால் கொடுக்கப்பட்ட சகல அறிவுறுத்தல்களையும் குறிக்கின்றது.[168] அக்காலத்தில் வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்கள் மாத்திரமே இருந்தபோதிலும், தற்பொழுது நம்மிடம் மனிதருக்கு அவசியமான தேவனுடைய சகல அறிவுறுத்தல்களையும் கொண்ட முழுமையான வேதாகமம் நம்முடைய சொந்த மொழியிலேயே உள்ளது. இதனால், நமக்கு அவசியமான தேவ செய்தியைப் பெற்றுக்கொள்வதற்கு எவரும் பரலோகத்துக்குச் சென்று அதை நமக்காக எடுத்துக்கொண்டு வரவேண்டியதில்லை என்பதைப் 12ம் வசனம் சுட்டிக்காட்டுகிறது.[169] இதேபோல சமுத்திரத்தைக் கடந்து சென்று இன்னுமொரு நாட்டிலிருந்து அச்செய்தியை எவரும் கொண்டுவரவேண்டியதுமில்லை என்பதை 13ம் வசனம் அறியத்தருகின்றது. ஆனால் தற்காலத்தில், கிறிஸ்தவர்கள் தங்களுக்கான தேவசெய்திக்காகப் பரலோகத்திற்குச் சென்று வருவதாகக் கூறுபவர்கள், அல்லது வேறு நாட்டிலிருந்து வருகிறவர்கள், இல்லையென்றால் மரித்தோரிலிருந்து வருகிறவர்கள் யாராவது இருக்கின்றனரா என்று தேடியலைகின்றனர். ஆனால், தேவஆலோசனைக்கு இத்தகைய மனிதர்கள் எவரும் தேவையில்லை என்றே உபாகமம் 30:11-14 கூறுகிறது. "தேவனுடைய வார்த்தையைத் தேடி நாம் எங்கும் அலைந்து திரிய வேண்டியதில்லை."[170] ஏனெனில், தேவனுடைய வார்த்தை அவர் அருளிய வேதாகமத்திலேயே உள்ளது. இதை நாம் அனுதினமும் வாசித்து தியானித்து வந்தால்,[171] நம்முடைய வாழ்வுக்கான தேவனுடைய வழிநடத்துதலும் ஆலோசனையும் எப்பொழுதும் நமக்கு கிடைக்கும். நம்முடைய வாழ்வும்

---

164 உபாகமம் 4:7-8ல், "நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது?" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

165 J.G.McConville, *Deuteronomy: Apollos Old Testament Commentary*, p. 429. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவன் இஸ்ரவேல் மக்களுக்குச் சமீபமாக இருந்ததினால் உலகிலுள்ள சகல ஜனங்களிலும் அவர்கள் சிறப்பான ஜாதியினராயிருந்தனர் (உபா.4:7-8). எனினும், தேவனுடைய வார்த்தை அவர்களுக்கு சமீபமாய் இருந்ததினால், அவர்களுடைய சிறப்பான தன்மை மற்றவர்களுக்குத் தெரியக்கூடியவிதத்தில் இருந்தது. அவர்கள் தேவனுடைய வார்த்தையின்படி வாழும்போது இச்சிறப்புத்தன்மை வெளிப்பட்டது (C.H.J.Wright, *Deuteronomy: New International Biblical Commentary*, p. 291).

166 E.H.Merrill, *Deuteronomy: The New American Commentary*, p. 167. உபாகமம் 6:6ல் "இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது" என்று தேவன் கட்டளையிட்டுள்ளார்.

167 J.A.Thompson, *Deuteronomy: Tyndale Old Testament Commentary*, p. 286.

168 E.H.Merrill, *Deuteronomy: The New American Commentary*, p. 391. இத்தகைய அர்த்தத்துடனேயே இச்சொல் உபாகமம் புத்தகத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது (4:2, 5:29, 7:9, 8:2, 8:6, 11:8, 11:13, 11:22, 11:17, 13:4, 13:18, 15:5, 15:26, 15:13, 15:18, 27:1, 28:1, 28:9, 28:13, 30:8).

169 L.Goldberg, *Deuteronomy: Bible Study Commentary*, p. 153.

170 D.L.Christensen, *Deuteronomy: Word Biblical Commentary Volume 6*, p. 743.

171 வேதாகமத் தியானத்தைப்பற்றிய விபரங்களுக்கு எனது ஆனந்தமான வாழ்வுக்கு அவசியமான வழிமுறை என்னும் நூலின் இரண்டாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்

ஆசீர்வாதமானதாய் இருக்கும். "தேவன் தம்முடைய வார்த்தையை வேதாகமத்தில் நமக்குக் கொடுத்துள்ளதினால் தேவனுடைய வார்த்தையைப் பெறுவதற்காக நாம் எதுவும் செய்யத் தேவையில்லை. வேதாகமத்தை அன்றாடம் வாசித்து அதன்படி வாழ்வதே நாம் செய்யவேண்டிய ஒரேயொரு காரியமாக உள்ளது."[172]

ஆவிக்குரிய ஆலோசனைகளுக்கும் தேவனுடைய வழிநடத்துதலுக்கும் நம்மிடமிருக்கும் வேதாகமம் போதுமானதாக உள்ளது. மரித்தோரின் ஆவிகள் நமக்கு எவ்வித ஆலோசனையும் கொடுப்பதில்லை என்பதனால், மரித்தோரை வழிகாட்டும் தெய்வங்களாகக் கருதுவதில் எவ்வித அர்த்தமும் அல்ல. மேலும், பிசாசுகளே மரித்தோரைப்போல வேஷமிட்டு மக்களை வஞ்சித்துவருவதனால், மரித்தோரிடம் ஆலோசனைக்காகச் செல்பவர்கள் தவறான வழிகளிலேயே செல்கின்றனர். தேவன் நமக்கு அவசியமான சகல அறிவுறுத்தல்களையும் வேதாகமத்தில் கொடுத்துள்ளதினாலும், தற்காலத்தில் தேவன் வேதாகமத்தின் மூலமே நம்மோடு பேசுவதனாலும், நாம் ஆவிக்குரிய ஆலோசனைகளுக்காக வேதாகமத்தையே ஆராய்ந்து பார்க்கவேண்டும். இதனால்தான் லாசருவையும் ஐசுவரியவானையும் பற்றிய உவமையில், உயிரேடிருப்பவர்களுக்கு தேவனுடைய செய்தியை அறிவிப்பதற்கு மரித்தோரிலிருந்து எவரையும் அனுப்பவேண்டியதில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் போது, "அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும்" என்று ஆபிரகாம் சுட்டிக்காட்டியுள்ளார் (லூக்.16:29). நாம் ஏற்கனவே பார்த்தபடி, இவ்வசனத்தில் "மோசேயும் தீர்க்கதரிசிகளும்" என்னும் சொற்பிரயோகம் அக்காலத்தில் வேதாகமமாக இருந்த பழைய ஏற்பாட்டையே குறிக்கின்றது.[173] அக்காலத்தில் மக்கள் பழைய ஏற்பாட்டிலிருந்தே தேவனுடைய ஆலோசனையை பெறவேண்டும் என்பதையே ஆபிரகாமின் அறிவுறுத்தல் சுட்டிக்காட்டுகிறது. தற்காலத்தில் தேவனுடைய முழுமையான வெளிப்படுத்தலைக் கொண்டுள்ள வேதாகமம் நம்மிடம் உள்ளது. இதனால், "நாம் வேதாகமத்தைத் திறக்கும்போது, தேவனும் நம்முடன் பேசுவதற்காகத் தம்முடைய வாயைத் திறக்கின்றார்." ஏனெனில், "வேதாகமத்தின் இரு ஏற்பாடுகளுமே அவர் நம்மோடு பேசுவதற்காக உபயோகிக்கும் அவருடைய உதடுகளாயுள்ளன."[174]

### ஆதார நூல்கள்

#### இறையியல் நூல்களும் கட்டுரைகளும்


Arnold, Bill T. "Necromancy and Cleromancy in 1 and 2 Samuel" in *Catholic Biblical Quarterly*. 66 (2004), pp. 199-213.

Berkhof, Louis. *Systematic Theology*. Edinburgh: The Banner of truth Trust, 1988.

Beuken, W.A.M. "1Samuel 28: The Prophets as Hammer of Witches" in *Journal of the Old Testament Studies*. 6 (1978), pp. 3-17.

Bloch-Smith, B.L. "The Cult of the Dead in Judah: Interpreting the Material Remains" in *Journal of Biblical Literature*. 111 (1992), pp. 213-214.


---

172 W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 227.

173 பக்கம்

174 T.Watson, *A Body of Divinity: Sermons Upon the Westminster Catechism*, p. 26.

Boettner, Loraine. *Studies in Theology*. Phillipsburg: Presbyterian and Reformed Publishing Company, 1947.
Boice, James M. *Foundations of Christian Faith*. Downers Grove/Leicester: Inter Varsity Press, 1986.
Cox, Patricia. “Origen and the Witch of Endor: Toward an Iconoclastic Typology” in *Anglican Theological Review*. 2 (1984), pp. 139-144.
Erickson, Millard J. *Christian Theology*. Grand Rapids: Baker Book House, 1988.
Figart, T. “Saul, the Spirits, and Samuel” in *Grace Theological Journal*. 11 (1970), pp. 13-29.
Grudem, Wayne. *Systematic Theology: An Introduction to Biblical Doctrines*. Leicester: Inter Varsity Press, 1981.
Lewis, T.J. *Cults of the Dead in Ancient Israel and Ugarit*. Atlanta: Scholars Press, 1989.
Pember, G.H. *Earth’s Earliest Ages*. Grand Rapids: Kregel Publications, 1975.
Smelik, “The Witch of Endor: 1 Samuel 28 in Rabbinic and Christian Exegesis Till 800 AD” in *Vigiliae Christianae*. 33 (1979), pp. 160-179.
Sproul, R.C. *The Invisible Hand: Do All Things Really Work for Good?* Dallas: Word Publishing, 1996.
Stott, John R.W. *The Bible: Book For Today*. Leicester: Inter Varsity press, 1982.
Thiessen, Henry C. *Lectures in Systematic Theology*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1979.
Unger, Merrill F. *Biblical Demonology*. Wheaton: Van Kampen Press, 1952.
Waltke, Bruce. *Knowing God’s Will*. Eastbourne: Kingsway Publications, 1999.
Watson, Thomas. *A Body of Divinity: Sermons Upon the Westminster Catechism*. Edinburgh: The Banner of Truth Trust, 1958.
Wenham, John W. *Christ & The Bible*. Downers Grove: Inter Varsity Press, 1972.

### வேதவியாக்கியான நூல்கள்

Ackroyd, Peter R. *The First Book of Samuel*. Cambridge: Cambridge University Press, 1971.
Arnold, Bill T. *1 & 2 Samuel: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 2003.
Baldwin, Joyce. *1 and 2 Samuel: Tyndale Old Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1989.
Beasley-Murray. George R. *John: Word Biblical Commentary Volume 36 – Second Edition*. Nashville; Thomas Nelson Publishers, 1999.
Bergen, Robert D. *1, 2 Samuel: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1996.
Borchert, Gerald. John 12-21: The New American Commentary. Nashville: Broadman & Holman Publishers, 2002.
Bruce, F.F. *The Gospel of John: Introduction, Exposition and Notes*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1983.
________. *Hebrews: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1990.
Brueggemann, W. *First and Second Samuel: Interpretation*. Louisville: Westminster/John Knox press, 1990.
Burdick, Dnald W. *The Epistles of John: Everyman’s Bible Commentary*. Chicago: Moody Press, 1970.
Carson, D.A. *John: The Pillar New Testament Commentary*. Eerdmans Publishing Company, 1991.
Craigie, P.C. *Deuteronomy: The New International Commentary on the Old Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1976.
Christensen, Duane L. *Deuteronomy: Word Biblical Commentary Volume 6B*. Nashville: Thomas Nelson Publishers, 2002.
Crockett, William D. *A Harmony of the Books of Samuel, Kings, and Chronicles*. Grand Rapids: Baker Book House, 1951,
Davis, John J. & Whitcomb, John C. *Israel From Conquest to Exile: A Commentary on*

*Joshua – 2Kings*. Winona Lake: BMH Books, 1970.
Driver, S.R. *Notes on the Hebrew Text and the Topography of the Books of Samuel*. Oxford: Clarendon Press, 1913.
Evans, Mary J. *1 and 2 Samuel: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 2000.
___________. *The Message of Samuel*. Leicester: Inter Varsity Press, 2004.
Garland, D. David. *Isaiah: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Pubishing House. 1968.
Gordon, Robert P. *1 & 11 Samuel: Library of Biblical Interpretation*. Carlisle: Paternoster Press, 1986.
Haley, J.W. *An Examination of the Alleged Discrepancies of the Bible*, Grand Rapids: Baker, Book House, 1958.
Hertzberg, H.W. *1 and 2 Samuel: Old Testament Library*. Philadelphia: Westminster Press, 1964.
Hiebert, D. Edmond. *The Epistles of John: An Expositional Commentary*. Greenville: Bob Jones University Press, 1991.
Kirkpatrick, A.F. *The First Book of Samuel*. Cambridge: Cambridge University Press, 1891.
Klein, Ralph W. *1 Samuel: Word Biblical Commentary Volume 10*. Waco: Word Books Publisher, 1983.
Kostenberger, Andreas J. *John: Baker Exegetical Commentary on the New Testament*. Grand Rapids: Baker Publishing Groups, 2004.
Kruse, Colin G. *John: Tyndale New Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 2003.
Laney, J. Carl. *First and Second Samuel: Everyman's Bible Commentary*. Chicago: Moody Press, 1982.
Lincoln, Andrew T. *John: Black's New Testament Commentary*. Peabody: Hendrickson Publishers, 2006.
McCarter, P.K. *1 Samuel: Anchor Bible Commentary*. New York: Doubleday, 1980.
McConville, J.G. *Deuteronomy: Apollos Old Testament Commentary*. Leicester: Apollos, 2002.
McKenna, David L. *Isaiah 1-39: The Preacher's Commentary Volume 17*, Nashville: Thomas Nelson Publishers, 1993.
McKane, William. *1 and 2 Samuel: Torch Bible Commentary*. London: SCM Press, 1963.
Merrill, Eugene H. *1 Samuel: The Bible Knowledge Commentary Old Testament*. Wheaton: Victor Books, 1985.
______________. *Deuteronomy: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1994.
Morris, Leon. *John: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1995.
Motyer, J.A. *The Prophecy of Isaiah*. Leicester: Inter Varsity Press, 1993.
Robinson, Gnana. *1&2 Samuel: International Theological Commentary*, Grand Rapids: Eerdmans Publishing Company, 1993.
Schaff, Philip. ed., *The Books of Samuel: Lange's Commentary*. Grand Rapids: Zondervan, Publishing House, 1960.
Tasker, R.V.G. *John: Tyndale New Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1988.
Thompson, J.A. *Deuteronomy: Tyndale Old Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1974.
Tsumura, D. Toshio. *First Samuel: The New International Commentary on the Old Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2007.
Vos, Howard F. *1,2 Samuel: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1963.
Watts, John D.W. *Isaiah 1-33: Word Biblical Commentary Volume 24*. Waco: Word Books Publisher, 1985.
Whitacre, Rodney A. *John: The IVP New Testament Commentary*. Downers Grove: Inter

Varsity Press, 1999.
Wiersbe, Warren W. *Be Successful: An Old Testament Study – 1 Samuel*. Colorado Springs: Cook Communications, 2001.
Wilson, Geoffrey B. *New Testament Commentaries Volume Two*. Edinburgh: The Banner of Truth Trust, 2005.
Wright, J.H. *Deuteronomy: New International Biblical Commentary*.Peabody: Hendrickson Publishers, 1996.
Youngblood, Ronald F. *1, 2 Samuel: The Expository Bible Commentary Volume 3*. Grand Rapids: Zondervan Publishing House, 1992.